# வைகறை

வைகறை - வருடம் - 1 விடியல் - 2 மார்கழி - 1990

## உள்ளே!

- தங்காலைச் சிறையுடைப்பு (சிறப்புக் கட்டுரை)
- சிறுகதை
- கவிதை
- தற்கால ஈழத்தின் செய்தி விபரம்
- சிந்திக்கச் சிரிக்க "அந்தியின் பச்சோந்தி"
- சிறுவரே உங்களுக்காக
- இன்னும் பல செய்திகள்

## மன்னிக்க வேண்டி............

*வாசகர்களே!*

*இம்மலர் மார்கழி இதழாக வெளிவருகின்றது என்பதனை உங்களுக்கு அறியத்தருகிறோம். மாதம் தோறும் வெளிவரும் இச்சஞ்சிகை கடந்த மாதத்தில் வெளிவராமைக்கு நாம் மிகவும் மனம் வருந்துகிறோம்.*

*பல தவிர்க்க முடியாத காரணங்களையிட்டு, உரிய நேரத்தில் வெளியிட முடியாமல்ப் போன 'வைகறை'யானது இனிவருங்காலங்களில் உரிய நேரத்தில் உங்கள் கரங்களில்த் தவழும் என்பதையும் நாம் உறுதிப்படுத்து கிறோம். கடந்த மாத இதழுக்காக காத்திருந்து ஏமாற்றம் கண்ட நீங்கள் அனைவரும் எங்களை மன்னிப்பீர்கள் என்று நம்புகிறோம்.*

"நன்றி"

"வைகறை நிர்வாகக்குழு"

# வைகறையின் பேனாவிலிருந்து......

தமிழ் பேசும் மக்களின் போராட்டம் வேருன்றிய காலம் தொட்டு இற்றைவரையில் எம் பிரதேசங்களில் பலதரப்பட்ட சமூக பொருளியல்ப்பிரச்சனைகள் தலைதூக்கியிருப்பது கவனிக்கத்தக்கதே அவற்றுள் மிகமுக்கியமானதும் நிவாரணிக்கப் படவேண்டியதுமான பிரச்சனை கல்வியாகும் அதாவது .எமது சமுதாயத்தின் உயர்வுக்கும் வளர்ச்சிக்கும் ஆணி வேராக அமையும் கல்வித்தரம் அல்லது நிலமை திடீரென இடையூறுகளுக்கு உள்ளானமை அன்றி தொடரமுடியது போனமை அச்சமுதாயத்தினைப் பின்னடைய செய்து விட்டது என்பதோடு அதனை மீட்டு மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டுவர பல சகாப்தங்கள் எடுக்கும் என்பது வெள்ளிடைமாலை ...

எமது தமிழ் பேசும் மக்கள் வாளும் பிரதேசங்களில் கல்வியின், நிலைத்தரம் என்பன மாற்றமடைவதற்கு, அன்றேல் பின்னடைவு நிலையைக் தளுவுவதற்கு என்ன காரணங்கள் முக்கியமானவை என்பது இக்காலகட்டத்தில் தெளிவாக ஆராயப்பட வேண்டியதும் அதற்கான நிவாரணங்கள் வழங்க வேண்டியதும் போராடும் இயக்கங்களினதும் சமுகஅமைப்புக்களின் கடமையாகும் .

எனவே தமிழ் பேசும் மக்களின் கல்வி நிலையில் பாதிப்பு ஏற்பட காரணமாய் அமைந்தவை எவை என்பது இங்கே ஆராயப்படுவது சிறந்ததாகும். போராட்டத்தின் வளர்ச்சியினை தடுக்க அல்லது அழிக்க முனைந்த இலங்கை அரசு தனது தாக்குதல்களைப் பாடசாளைகல் கல்லூரிகள் வளாகங்கள் போன்ற கல்வி நிலையங்கள் மீது நாடாத்தியும் போராட்டத்தை மையமாக அல்லது சாட்டாகவைத்துக்கொண்டு கல்வி ஸ்தாபனங்களை இலங்கை அரசு காலவரையின்றி மூடியமையும் இந்த பின்னடைவுக்குரிய காரணங்களில் ஒன்றாகும். இதனால் மாணவர்கள் மத்தியில் மனரீதியான பாதிப்பும் கசப்பும் ஏற்பட்டதோடு கல்வியை முற்றாக நிறுத்தவேண்டிய கட்டாய சுழ்நிலைக்கும் தள்ளப்பட்டார்கள்.

இரண்டாவதாக கற்கும் வயதெல்லைக்குற்பட்ட ஆண் பெண் இருபாலாரும் இலங்கை அரசின் அட்டுளியங்களின் நிமித்தமும் தொடர்ந்து கட்டவிழ்த்துவிடப்பட்ட இனக் கலவரங்களில் பாதிப்பினாலும் இயக்கங்களில் சேர்ந்தமையும் கல்வி நிலையில் ஏற்பட்ட பாதிப்புக்கு காரணி ஆகின்றது. அடுத்து ஆரயப்பட வேண்டிய முக்கிய விடயம் தமிழ் பேசும் மக்களின் கல்வி வளர்ச்சியும் புத்திஜீவிகளின் வெளியேற்றமும் என்பதாகும். புத்திஜீவிகள் (ஆசிரியர்கள் பிரத்தியேகக் கல்வி நிலையைப் பொறுப்பாளர்கள் விரிவுரையாளர்கள்) நாட்டை விட்டு வெளியேறியமை அதேவேளை அவர்களின் இடங்களுக்கு உரிய நேரத்தில் இலங்கை அரசு பிரதியீடு செய்யாமை பிரத்தியேகக் கல்வி நிலையங்கள் இயங்கமுடியாது போனமை கல்வி வளர்ச்சியில் பாதிப்பை எற்படுத்தியிருப்பது கவனிக்த்தக்கது.

மேற்சொன்ன காரணங்களினாலும் மற்றும் உபகரணங்களான கல்வி அதிகாரிகள் விரிவுரையாளர்கள் கொல்லப்பட்டமை போன்றவற்றினாலும் தமிழ் பேசும் சமுதாயத்தின் கல்வியில் ஏற்பட்டிருக்கும் இந்த பாரிய இடைவெளி நிரப்பப்படாது விடப்படுமேயானால் நாளைய எம் சந்ததி பல பிரச்சனைகளை எதிர்னோக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்படும் என்பது யாவரும் அறிந்த உண்மை எதிர்காலத்தில் நாம் எடுக்கப் போகும் நடவடிக்கைகள் மேற்கொள்ளும் முயற்சிகள் மீண்டும் இந்த நிலைவராது நிவர்த்திப்தாக அமையுமானால் நாளை நடக்கப்போகும் அல்லது உருவாக்கப்போகும் பல சிக்கல்களை தீத்துவைக்கும் வழியினை தீர்க்கதரிசனம் செய்தவர்களாகிவிடுவோம் இது தொடர்பான புதிய கருத்துக்கள் விமர்சனங்கள் போன்றவை முன்வைக்கப்படுமானால் வாசகர்களாகிய நீங்கள் இப்பணியில் உங்கள் பங்களிப்பை வழங்கியவர்களாவீர்கள் .

ஆசிரியர்
"வைகறை நிர்வாகக்குழு"

R. Pathmanaba Iyer
27-B High Street
Plaistow
London E13 0AD
Tel: 020 8472 8323

# கடந்தகால நிகழ்வுகள்! ஈழத்திலிருந்து வரும் செய்திக் கொத்து.

## வடக்கும் கிழக்கும்

இந்திய ஆக்கிரமிப்பு படையின் வெளியேற்றத்தின் பின் இலங்கை அரச படைகளுக்கும் போராளிகளுக்கும் இடையே ஏற்பட்ட மோதலானது பல்லாயிரக்கணக்கான மக்களின் வாழ்க்கையை நிர்மூலமாக்கியிருக்கிறது. வடகிழக்கு மாகாணங்களில் இருந்துமட்டும் ஒரு இலட்சத்திற்கும் மேலான மக்கள் வெவ்வேறு இடங்கட்கு அகதிகளாய் இடம் பெயர்ந்துள்ளனர். யாழ்குடா நாட்டில் இருந்து வெளியேறியோர் தொகை 45 ஆயிரத்தில் இருந்து ஐம்பது ஆயிரத்தைத் தாண்டிவிட்டது. காணாமல் போனவர்கள் அல்லது சுட்டு கொல்லப்பட்டவர்கள் என்ற கணக்கில் 5000த்திற்கும்மேற்பட்டோர் இடம்பெறுகின்றனர்.

மருத்துவ வசதியின்மை காரணமாக தீவுப்பகுதிகளில் சுமார் 25க்கும் மேலானோர் இறந்துவிட்டது எமது கணிப்பீட்டின்படி காணக்கிடக்கின்றது. மட்டுநகர் யாழ் உட்பட இன்னும் சில பகுதிகளில் உணவின்மை யால் ஏற்பட்ட பட்டினிச்சாவு 210 ஆகும்.

அண்மையில் எமது விசேட அரசியல் நிருபர் கொடுத்த தகவலின்படி 10 கர்ப்பிணிப் பெண்கள் போதிய மருத்துவப் பராமரிப்பின்றி இறந்தமை இங்கு கவனிக்கத்தக்கது. 900 இளைஞ யுவதிகள் அரச படைகளினால் கைது செய்யப்பட்டு வேறு இடங் களுக்கு எடுத்து செல்லப்பட்டுள்ளனர்.

விவசாயம், மீன்பிடி, வியாபாரம் என வடகிழக்கின் முக்கிய வருமானம் கொடுக்கும் துறைகள் ஸ்தம்பிதம் அடைந்திருப்பதோடு வங்கிகள், பொதுநல மக்கள் ஸ்தாபனங்கள் உட்பட ஏனைய மக்கள் சேவை நிலையங்களும் மூடப்பட்டமை அல்லது குண்டுகளிட்டு தகர்க்கப்பட்டமை இப்பகுதி மக்களின் அன்றாட வாழ்க்கையை இக்கட்டான சூழ்நிலைக்குத் தள்ளி யுள்ளது. மூன்று மாதங்களுக்கு மேலாக தம் சொந்த இடங்களை விட்டு வேறு இடங்களுக்குப் பெயர்ந்த தமிழ் பேசும் மக்கள் தத்தமது வேலைகளுக்குத் திரும்பமுடியாத நிலையில் தத்தளிக்கின்றனர்.

## முல்லைத்தீவு

1990ம் ஆண்டு ஆவணி மாதம் இலங்கைப் பாதுகாப்புப் படையினர் கடல், தரை, விமானம் மூலம் கண்மூடித்தனமான தாக்குதலை முல்லைத்தீவு நகரை நோக்கி மேற்கொண்டனர். இதனால் தற்போது முல்லைத்தீவு நகரம் வெறிச்சோடி காணப்படுகின்றது. இத்தாக்குதலினால் முல்லைத்தீவும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களில் இருந்தும் இதுவரை 50,000 இற்கு மேற்பட்ட மக்கள் அகதிகளாகியுள்ளனர். இவர்களுள் திருகோணமலையில் இருந்து முல்லைத்தீவிற்கு அகதிகளாக வந்த 12,000 அகதிகளும் அடங்குவர்.

முல்லைத்தீவும் அதன் சுற்று வட்டாரத்திலும் குண்டு வீச்சினால் பாதிக்கப்பட்ட முக்கிய அலுவலகங்கள்.

1. முலலைத்தீவு வைத்தியசாலை.
2. முல்லைத்தீவுக் கச்சேரி.
3. முல்லைத்தீவுக் கல்வித்திணைக்களம்.
4. சுகாதாரத் திணைக்களம்.
5. முல்லைத்தீவு மகாவித்தியாலயம் (மத்திய பாடசாலை)
6. கிறிஸ்தவ மகளிர் பாடசாலை.
7. ப.நோ.கூட்டுறவுச் சங்கக் கட்டடம்.
8. சரித்திரப் புகழ் வாய்ந்த வற்றாப்பளை அம்மன் கோயில்.

## மன்னார்

மன்னார் மாவட்டமும் மன்னாரை சுற்றியுள்ள கிராமங்களில் இருந்தும் இதுவரை 65,000 இற்கு மேலான மக்கள் அகதிகளாகியுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் 22-8-90 இலும் முல்லைத்தீவில் 1-9-90 இலும் காலவரையின்றி பிரகடனப் படுத்தப்பட்ட ஊரடங்குச் சட்டத்தால், மக்களின் நாளாந்த வாழ்க்கை பாதிக்கப்பட்டு, சிறைக்கைதிகள் போல் ஆகியுள்ளனர்.

இலங்கைக்கான இந்தியத்தூதுவர் நாகேந்திரநாத் ஜாவினால் விடப்பட்ட அறிக்கையொன்றில்,

இதுவரை இலங்கையில் இருந்து அகதிகளாக இந்தியாவிற்கு வந்தோர் தொகை 250,000 எனக் குறிப்பிட்டுள்ளார்.

நிவாரணம்

மருத்துவ, உணவு வசதி இன்றியும், தத்தம் வீடுகளை இழந்தும் வடக்கு, கிழக்கில் லட்சக்கணக்கான மக்கள் அகதிகளாக அவதிப் படுவதாகவும் இலங்கையின் ஜனாதிபதி R. பிரேமதாசா ஒத்துக்கொண்டுள்ளார்.

வடக்கு கிழக்கில் பிரச்சினை உள்ளதாக ஒத்துக் கொள்ளும் அரசாங்கம், சகல கட்சிகளின் ஒன்று இணைந்த ஒத்துழைப்பையும் பிரச்சனைக்குத் தீர்வுகாண கோரியுள்ளது. .ஜனாதிபதி R.பிரேமதாசா மேலும் கூறுகையில் , 'தான் பிரச்சனையைத் தெளிவாக விளங்கிக் கொள்வதாகவும், அதாவது வடக்குக் கிழக்கைச் சேர்ந்த இளைஞர்கள் ஆயுதம் ஏந்தி போராட வெளிக்கிட்டதன் நோக்கம் சமூகத்தில்ஏற்பட்ட ஏற்றத்தாழ்வும்,சமஅந்தஸ்து கொடுக்கப் படாமையும் எனக் கூறினார். ஆடி மாதம் 18ம் திகதியின் பின்னர் யாழ்குடா இருள் மயமாகியதன் காரணம், பலத்த குண்டு வீச்சினால்பாதிக்கப்பட்ட மின்சாரக்கம்பிகளும் அத்துடன் சுண்ணாகம் மின் நிலையம் சேதத்துக்குள்ளானதும் ஆகும். ஆவணி மாதத்தின் பின் வடக்கில் அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிபயங்கரமாக உயர்ந்துள்ளது.

ஒரு கொத்து அரிசி ——Rs25/=
ஒரு கிலோ சீனி ——Rs75/
ஒரு லீற்றர் பெற்றோல்—Rs175/=
ஒரு போத்தல் தேங்காய் எண்ணெய் —Rs45/=
ஒரு போத்தல் மண்ணெண்ணெய்———Rs65/=
ஒரு கிலோ தேயிலை —————Rs120/=
ஒரு போத்தல் நல்லெண்ணெய்———Rs100/=

இலங்கைப் பாராளுமன்றத்தைச் சேர்ந்த எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கிழக்குமாகாணத்தைச் சுற்றி பார்வையிட்டுள்ளனர். இவர்களுடன் சுற்றிப் பார்வையிட்ட ENDLF ஐச் சேர்ந்தவர்கள் விட்டஅறிக்கையொன்றில் 29 அகதிகள் வயிற்றோட்டத்தால் இறந்துள்ளதாக குறிப்பிடப்பட்டு ள்ளனர்.

மேலும் கிழக்கிலுள்ள அகதிமுகாமில் இருந்து இலங்கை இராணுவத்தால் 148 பேர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. போதிய மருத்துவ,சுகாதார வசதியின்மையால் அகதிமுகாமின் சுற்றாடல் பாதிக்கப்பட்டுள்ளது. மலசலகூட வசதி இல்லாமையும் ஒரு முக்கிய பிரச்சனையாய் உள்ளது.

## உணவு, எரிபொருள், மருத்துவம்

உணவு,எரிபொருள், மருத்துவ வசதிகள் வடக்கு கிழக்கு மாகாணங்களில் மிகவும்மோசமான நிலையில் பாதிக்கப்பட்டுள்ளது. வடக்குக் கிழக்கைச் சேர்ந்த பிரஜைகள் குழுக்கள் இது விடயமாக ஜனாதிபதி R.பிரேமதாசாவின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளனர்.

வடக்கில் சிங்கள அரசினது பாதுகாப்புப்படைகள் கடல்,விமானம், தரை மார்க்கமாக மேற்கொள்ளும் பயங்கரமான தாக்குதல்களால் சாதாரண பொது மக்கள் மிகவும் நெருக்கடிக்குள்ளாகியுள் ளார்கள். இது அப்பாவி மக்களைஅழிப்பதற்குத் தொடுக்கப் பட்டுள்ள போராகக் கருதப்படுகிறது.

*இலங்கையில் ஏற்பட்டு இருக்கும் இனப்பிரச்சனை*

*சில பிரமுகர்களின் அறிவித்தலும் வேண்டு தல்களும்:*

ஒருநாட்டின் சகோதர, சகோதரிகளுக்கிடையில் ஏற்பட்டுள்ள முடிவில்லா அழிவைக் கொண்டு வரும் போராக இப்பிரச்சனை கருதப்படுகிறது. இளைஞர்களை ஆயுதம் ஏந்தத் தூண்டியும், பெண்களை விதவைகளாகவும், பிள்ளைகளை அனாதைகளாகவும் ஆக்கிக் கொண்டு இருக்கிறார்கள். இதே வேகத்தில் இப்போர் செல்லுமானால் வடக்குக் கிழக்குப் பகுதிகள் மிக வேகமாக வனாந்திரமாக மாறும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

-அதி வணக்கத்திற்குரிய மேற்றாணியார் -ரேமன் பீலிக்ஸ்-

இலங்கை அரசாங்கம் அதிபயங்கரமான தந்திரத்தால் ஆயுதம் தாங்கிய சிங்கள எதிர்க்குழுக்களை அடக் கியது போல் தற்போது வடக்கு - கிழக்கில் உள்ள அப்பாவித் தமிழ்மக்களையும் கொன்று குவித்து வருகிறார்கள்.

'கிறிஸ்தவர்களாகிய நாம் அதிர்ச்சி அடைகிறோம்.ஏனெனில் எமது நாட்டில் மனித இனம் பாரிய இழப்பையும் அவலங்களையும் அடையக் காணும்போது தெற்கில் உள்ள மக்கள் ஒரு சண்டையை விரும்பும் மனநோய்க்கு ஆளாகி வருகிறார்களா எனத் தோன்றுகிறது. பாதுகாப்பிற்கு என சேர்க்கப்பட்ட நிதி பாதிப்படைந்தவர்களுக்கு பயன்படுவதிலும் பார்க்க சண்டையை தூண்ட உதவுவது போல் தெரிகிறது.

-அதி வணக்கத்திற்குரியமேற்றாணியார் கெனத் பெர்னாண்டோ-

(பொருளாதார நிலையத்தின் தலைவர்).

இந்த யுத்தம் அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளிற்கும் இடையே நடக்கும் யுத்தம் எனக் கூறப்பட்ட போதிலும், உண்மையாக இதனால் பாதிக்கப்பட்டவர்கள் பொதுமக்கள்தான். பட்டினியால் வாடிய எத்தனையோ மக்கள் தற்கொலை செய்துள்ளனர். இந்நிலை தொடருமானால் மேலும் பலர் இம்முயற்சியை மேற்கொள்ளுவார்கள் எனவும் நம்பப்படுகிறது. நோயாளிகளும், காயமடைந்தவர்களும், மருத்துவ வசதியின்றி மிகவும் துன்பத்திற்குள்ளாகிறார்கள்.

-வணக்கத்திற்குரிய சகோதரி-

(கிறிஸ்தவ மகளிர் பாடசாலை- இலங்கை)

*அண்மையில் கிடைக்கப்பெற்ற தகவலின்படி மட்டக்களப்பிலுள்ள அகதி முகாம்களின் நிலை :*

கிழக்கு மாகாணத்தில் ஒரு சிலநூறு தமிழ்பேசும் மக்களைவிட ஏனையோர் தத்தம் வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர். திருகோணமலையிலும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களையும் சேர்ந்த மக்கள் அகதிகளாக திருகோணமலைக்கும், மட்டக்களப்பிலும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களையும் சேர்ந்த மக்கள் மட்டக்களப்பிலும் அகதிகளாக வந்து அகதி முகாம்களில் தஞ்சமடைந்துள்ளனர். மட்டக்களப்பு,அம்பாறை போன்ற இடங்களில் தமிழ்பேசும் மக்களால் செய்யப்பட்ட வயல்களில், அவர்களை விரட்டி விட்டு அரசு உதவிக் காடையர்கள் ஊர்க்காவல் படையினரின் உதவியுடனும்சிங்கள இராணுவத்தின் உதவியுடனும் நெல்வயல்களை அறுவடை செய்கிறார்கள். மட்டக்களப்பு, அம்பாறை பகுதியில் உள்ள தமிழ் பேசும் மீனவர்களின் படகுகள் எரிக்கப்பட்டும், வீடுகள் சூறையாடப்பட்டும் உள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள சத்துருக் கொண்டான்,பிள்ளையாரடி, கல்முனை, வீரமுனை, மூன்றாம் குறிச்சி போன்ற கிராமங்களும் அம்பாறை மாவட்டத்தில் உள்ள துறநிலாவணை என்ற கிராமத்திலும் ஒரு தமிழ் பேசும் இனத்தவர்தன்னும் இல்லையென செய்திகள் கூறுகின்றன. .

மட்டக்களப்பில் வந்தாறுமூலை என்னுமிடத்தில் உள்ள அகதிமுகாமில் **15000** பேர் அகதிகளாக உள்ளனர். இவ்வகதிமுகாமில் இருந்து சிங்கள இராணுவத்தாலும் அரச ஊர்க்காவல் படையினராலும் அழைத்துச் செல்லப்பட்ட **300** வாலிபர்களின் நிலை என்னவென்று தெரியாதுள்ளது. ஒருவேளை சுட்டுக் கொல்லப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது. இளம் பெண்கள் அழைத்துச் செல்லப்பட்டு மானபங்கப்படுத்தப்பட்டுகொலைசெய்யப்பட்டுள்ளார்கள். இம்மாதிரியான செய்திகளை அறிந்த அகதிகள் காடுகளில் தஞ்சமடைகின்றனர்.

## செய்திச் சுருக்கம்

கண்டியில் உள்ள தொழில் நுட்பக் கல்லூரியில் இருந்து 5 தமிழ் மாணவர்களை இனந்தெரியாத நபர்கள் கடத்திச் சென்றுள்ளனர். இவர்களின் முடிவு இன்னும் தெரியவில்லை. லெப்.ஜென.கெமில்டன் வனசிங்கா (வட மாநில இராணுவப் பொறுப்பதிகாரி) கூறுகையில் யாழ்கோட்டையை பிடித்து விட்டால் பின் **3000** துருப்புகளின் உதவியுடன் யாழ்ப்பாணம் முழுவதையும்தான் பிடிக்கமுடியும்' என தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கத்தின் நாளாந்த இராணுவ செலவீனம் **160,000** இச்செலவு இவ்விதம் மார்கழி மாதம் மட்டும் தொடருமானால் . இலங்கையின் பொருளாதாரம் நிச்சயம் வீழ்ச்சியடையும் என நம்பப்படுகிறது. தமிழ் பேசும் மக்களைக் கொன்று சிங்கள மக்களை குடியேற்றுவதால் இலங்கையில் நடக்கும் பிரச்சினைக்குத் தீர்வு காணலாம் என அரசாங்கம் நம்புகிறது.

அதி. வண .மேற்றாணியார் றேமன் பீலிக்ஸ் கூறுகையில் 'வடக்கு கிழக்கு மாகாணங்கள் மிகவிரைவில் வனாந்தரமாகக் காணப்படும் எனவும்

இதற்குக்காரணம்விமானப்படையின்குண்டுவீச்சும்,தரைப் படையினரதும், கடற்படையினரதும் பீரங்கித்தாக்குதலு மேயாகும் எனக்கூறியுள்ளார்.

5000 தமிழ் பேசும் மக்களைக் கொன்றுகுவித்ததைக் கண்டியாத U.N.O. பாலஸ்தீனத்தில் 19பேர் கொலை செய்யப்பட்டதை அக்கறையாகக் கண்டித்ததையும், இவர் கண்டித்துச் சுட்டிக்காட்டியுள்ளார்.

# கணப்பொழுது குறுக்கெழுத்துப் போட்டி

போட்டிவிதிகள்:

1. ஒருவர் ஒரு விடை மாத்திரமே அனுப்பலாம்.
2. விடைகள் தை 16ம் திகதிக்கு முன் அனுப்பப்படவேண்டும்
3. வெற்றி பெறும் ஒருவர் 10 களுக்குரிய காசோலையை பரிசாகப் பெறுவார்.

கடந்த மாத போட்டிக்கான விடைகள்.

மேலிருந்து கீழ்

1 - இடுக்கன்
2 - ரசிகர்
3 - கனகம்
11 - வீதி
29 - துதி

இடமிருந்து வலம்

1 - இரவு
4 - கனனி
8 - சின்னவீடு
14 - கடுகதி
19 - கர்வம்
27 - பவுண
29 - தூது
33 - முத்திரை

(பரிசிற்குரியவர் பெயர் அடுத்த இதழில் வெளிவரும்)

இவ்விதழ்ப் போட்டிக்கான தரவுகள்.

மே.கீ

1. தமிழ்க் காலங்களில் ஒன்று
13. நரிக்கும் இருக்கும்
7. நியாயம் தொடர்பாக பேசும்போது இது வரும்
17. பதவியில் உள்ளோர் இப்படியும் கேட்பர்
23. மழைக்காலங்களில் அதிகமாக நடக்கும்

இ.வ

1. முல்லை, வவுனியா, மன்னார் பகுதியைச் சொல்வர்
5. அழைக்கும் மனித உறவு முறைகளில் ஒன்று
8. சப்த ஸ்வரங்கள் (குழம்பி வரும்)
17. பாட்டு என்றும் சொல்வர்
31. ஜனநாயகமும் இப்படித்தான்
43.மனைவியை இழந்தவன்.
22.காதலியைக் காணாத போது ஏற்படுமாம்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | 32 | 33 | 34 | 35 |
| 36 | 37 | 38 | 39 | 40 | 41 | 42 |
| 43 | 44 | 45 | 46 | 47 | 48 | 49 |



# சிறுகதை

## கொழும்பில் இருந்து ரெலிபோன்!

புவனதாசன்.

வினோ உனக்கு கொழும்பில இருந்து ரெலிபோன் மச்சான் ஓடி வா. நண்பன் சிவாவின் அவசர அழைப்புக் கேட்டு இரவு சாப்பாட்டுக்கு மரக்கறி வெட்டிக் கொண்டிருந்த வினோ குசினியில் இருந்து ஓடி வந்தான் .

கலோ .... கலோ ....

நான் வினோ பேசுறன் நீங்கள் யார் பேசுறீங்கள் கொழும்பு முனைப் பதிலைத் தொடர்ந்து ..

ஆ... அங்கிளா கதைக்கிறீங்கள் என்றான் வினோ!

சில வினாடிகள் மௌனமாக ஒலிவாங்கியை காதோடு ஒட்டிய வாறு பிடித்துக்கொண்டிருந்தான்.

என்ன?....... உண்மையா? ......

அங்கிள் பகுடிவிடாதையுங்கோ!

கொழும்பு முனையிடம் இருந்து வந்த செய்தி கேட்டு திகைப்புடன்

கேட்டான் வினோ .

நோ.... நோ இந்த இரண்டு வார்த்தைகள் மட்டும் வீட்டையேவெடிகுண்டு வைத்து தகர்த்தது போல்- வெளிவர றிசிவரை கை நழுவ விட்ட வினோ கத்தியபடி தனது அறையை நோக்கி விரைந்தான் .

அந்த வீட்டிலே இருக்கும் யாருக்காவது இலங்கையிலிருந்து ரெலிபோன் வந்தால் யாருக்கு வருகிறதோ அவனைவிடஅவனுடன் இருக்கும் மற்றவர்களுக்குதான் அதிக மகிழ்ச்சி காரணம் இலங்கையில் இருந்து எதாவது புதினங்களை அறிந்து கொள்வதுதான். ரெலிபோனுக்குப் பக்கத்தில் உடனேயே புதினம் கேட்டறிய ஆவலுடன் நின்ற சிவா சற்று நேரம் என்ன செய்வதென்றே தெரியாமல் அப்படியே நின்றவன் நேரே வினோவின் அறைக்கு விரைந்தான்

என்ன மச்சான் நடந்தது? சிவா வினாவினான்

பதிலுக்கு அழுகை அதிகரித்தது வினோவுக்கு என்னடாப்பா நடந்தது? சொல்லன் சிவாவின் கேள்வி எப்படியாவது பதிலை திருடுவது போல அமைந்தது .

ரெலிபோனை அவன் கட் பண்ணேல்லத்தானே அதை எடுத்து கேளன்டாப்பா என்றான் முன்னறையிலே பொருளியல் தொடர்பான கட்டு ரையை பாதியில் நிறுத்து விட்டு வெளியே வந்த ரகு .

ஆம். முன் அறையிலே இருக்கும் ரகு நேசன் இருவரும் முறையே மட்டு நகரையும் மன்னாரையும் சேர்ந்தவர்கள் சிவா முல்லைத்தீவையும் வினோ யாழ் நகரையும் சேர்ந்தவர்கள் பிறப்பிலே வேறு வேறு இடங்களைச் சேர்ந்த இவர்கள் 1983ம் ஆண்டிலிருந்து அகதி என்கின்ற பட்டத்திலும் வாழுகின்ற இடத்திலும் இன்று ஒன்று பட்டவர்கள். இலங்கையில் இருந்து அகதிகளாய் நாடுவிட்டு நாடு தாவிய இவர்கள் அகதியாய் வருவது மட்டும் இவர்கள் நோக்கமாய் இருக்கவில்லை இடையிலே உடைந்துபோன இலட்சியங்கள் கல்யாணக் கடையிலே நிற்கும் சகோதரிகள்.

இப்படி எத்தனை எத்தனையே பிரச்சனைகள் அவர்களை லண்டனின் தென்பகுதியில் உள்ள ரூட்டிங் என்கிற பகுதியில் ஓர் சிறிய வீட்டிலே இணைத்து வைத்தது காலை தொடங்கி மாலை வரை கொட்டும் பனியிலே பல்லுக்கிட்ட தொழிற்சாலைகளிலும் பலசரக்குக்கடைகளிலும் உடலை வருத்தும் இவர்கள் ஒன்றாய் சந்திப்பதும் இரவுதான் ஒழுங்காக சாப்பிடுவதும் இரவுதான் .

ரகுவின் குரல் கேட்ட சிவா வினோவை வினாவுவதை விட்டு தொலை பேசியை எடுத்து கலோ என்றான் .

யார் தம்பி பேசிறது தொலைபேசியை தாங்கிய வண்ணம் நின்ற மறுமுனை கேள்வி கேட்டது .

நான் வினோவின் பிறெண்ட் சிவா பேசுறன் அண்ணை

என்ன நடந்தது என்றான்

தம்பி வினோவிட கேள் பிறெண்ட் பபிதா.....

என்ன? பபிதா ....

என்ன நடந்தது அவசர அவசரமாய் குறுக்கிட்டான் சிவா

'பபிதா எங்களையெல்லாம் விட்டு போயிட்டா' என்றது கொழும்புக் குரல்.

ஏன் அண்ணை என்ன நடந்தது ?

தம்பி நான் வரயுக்குள்ள தாராளமாய் பணம் கொண்டர மறந்திட்டன் இந்த நம்பருக்கு ஒருக்கா திரும்பியடியுங்கோ விளக்கமாய் சொல்லுறென் .

கதைத்து கொண்டிருந்தபடியே ரகு ஒரு பேனை ஒண்டு தாமச்சான் இந்த பேனை எழுதுதில்லை தொலைபேசியினருகே வைக்கப்பட்டிருந்த பேனையை வீசியபடி கேட்டான் சிவா.

இந்தா மச்சான் பேனை -ரகு

சொல்லுங்கோ நம்பரை அண்ணை சிவா

ஒண்டு மூண்டு ஆறு ஐஞ்சு நாலு நாலு கேட்டதை இன்னுமொருமுறை நிச்சயப்படுத்து வதற்காக சொல்லிக்கொண்டே எழுதினான் சிவா ரிசிவரை திரும்ப வைத்துவிட்டு ஆழமாக முச்சை இழுத்து விட்டான் சிவா.

என்னவாம் மச்சான் நடந்தது? சிவாவின் அருகிலே சென்று கேட்டான் இரு நிமிடங்களுக்கு முன் வேலையிலிருந்து வந்து ஒரிரு சொற்களை கேட்டு விபரமறியத்துடித்த நேசன், பபிதா வந்து இறந்திட்டாம் - சிவா .

பபிதா வினோவின் காதலி என்று சொல்வதைவிட அவனின் வீட்டினர் யாவரும் ஏற்றுக்கொண்ட தாலி கட்டாத மனைவி என்று கூறலாம் யாழில் கந்தர் மடம் எனும் இடத்தை பிறப்பிடமாகக்கொண்ட வினோ தன்வாழ்க்கையை நிர்ணயிக்கும் படிப்புடன் சேர்த்து தேடிக்கொண்டவள்தான் பபிதா. வினோ வின் பக்கத்து வீட்டு பரிமளத்தின் ஒரே மகள். வினோவும் அருணாசலம் தம்பதியாரின் ஒரே மகன் என்றாலும் மூன்று பெண் சகோதரங்களுடன் கூடப்பிறந்தவன்

காதலித்து திருமணம் செய்து கொண்ட அருணாசலத்திற்கு தன்மகன் காதலிப்பது ஆச்சரியத்தையோ அன்றி அதிர்ச்சியையோ கொடுக் கவில்லை அதிர்ச்சியை கொடுத்தது அவன் தனது திருமண காண்டத்தை ஆரம்பித்த விடயமே.

அன்று சனிக்கிழமை. மாலை ஆறு மணி 83ம் ஆண்டு சொந்த மண் விட்டு அன்னிய மண் தேட அடிக்கல் நாட்டிய நாள் அவனது உயிர்காதலியை இனிமேல் உயுருடன்பார்க்க முடியாதபடி செய்த நாள் ஆம் அன்றுதான் வினோ தன் பபிதாவை திருமணம் செய்யப் போவதாக தாய்மூலம் தூதனுப்பினான்

என்னதான் முற்போக்கு சிந்தனையும் தாராள மனப்பான்மையும் உடையவராக இருந்தாலும் அருணாசலமும் சமுதாயம் என்னும் கடலிலே தள்ளாடும் சாதாரண படகுதானே. சீதணம் எல்லை மீறிகூத்தாடும் எம் மண்ணில் மூன்று குமர்களைக் கரை சேர்ப்பது என்பது முடிந்த காரியமா என்ன? மூத்தவள் முப்பதில் இரண்டாவது இருபத்தொன்பதில் மூன்றாவது இருபத்தாறு என்று வரிசையில் கலியாணத்திற்காக காத்திருக்கும் மகள்மாரின் கடமையை முடிப்பது எப்படி என்று சிந்திப் பதிலேயே நேரத்தை விரட்டும் அருணாசலத்திற்கு தனது மகனும் பொறுப்பிலிருந்து விலகிப்போவது ஆச்சரியத்தை கொடுத்ததில் வியப்பொன்றுமில்லை .

லட்சங்களே லட்சியங்கள் என்று வாழுகின்ற இந்த நாள் இளைஞர்கள் மத்தியில் லட்சியங்களின் முன்னே இலட்சங்கள் வரக்கூடாது என்று நிற்கும் தன் மகனின் கொள்கை கண்டு ஒரு புறம் ஆனந்தம் என்றாலும் தன் மகள்மாரை கரைசேர்க்கத் தேவையான இலட்சங்கள் அவரை மறுபக்கத்தையும் யோசிக்கவைக்கத் தவறியதில்லை வினோவின் சீதணத்தை கொண்டு மூத்தவளின் முகவரியை எழுத கோட்டைகட்டிய அருணாசலம் திடீரென , நீ யாரையாவது கட்டு எனக்கு காரியமில்லை உன்ரை சகோதரிகளை ஒரு மாதிரி கரை சேர்த்துப் போட்டு கட்டு இல்லை உன்ரை விருப்பத்திற்கு கட்டுற என்றால் நாளைக்கு எங்கள் எல்லாரையும் பிரேதமாய்தான் பார்ப்பாய் .என்றார் அருணாசலம் .

தந்தையின் கோபத்திலும் அடிமனதில் இருந்து அனல் வாங்கி வரும் வார்த்தைகளிலும் வெறும் வெருட்டல் மட்டும் இருப்பதாக வினோ எண்ணவில்லை கூடப் பிறந்தவனின் குடும்பக் கடமையையும் பொறுப்பையும் சேர்த்து கூறுவதாகவே எண்ணினான் அப்போதுதான் கணேந்திரனின் ஏஜன்சி ஞாபகத்திற்கு வந்தது

கதையை விடுங்கோ. இப்ப யார் செத்தது எண்டு ஒப்பாரி வைக்கிறீங்கள். எனக்கு ஒரு 50.000 ரூபாய் உடனை வேணும். மற்றது என்னைப் பொறுத்தது என்றான் வினோ. ஐம்பது ஆயிரத்தை வைச்சு என்ன செய்யப் போறாய். அப்பா கேட்டார் .

தான் ஏஜென்சியை கண்டது லண்டனுக்கு அனுப்புவது பற்றி கதைத்தது தொடங்கி அனைத்தையும் கொட்டினான் வினோ. வினோவின் தீர்மானம் சரி என்று வீட்டில் எல்லோராலும் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளவே ஒரு வாரத்தில் சகல வேலைகளையும் முடித்துக்கொண்டு லண்டன் புறப்பட்டான் வினோ.

அது சரி என்ன நடந்ததாம் மச்சான் என்று சிவாவிடம் மெதுவாக கேட்டான் நேசன். .

அது தான் தெரியல்ல மச்சான் அந்தநாள் .புக் பண்ணின நேரம் முடிஞ்சுது என்னை திரும்ப எடுக்க சொன்னது என்று கூறிக் கொண்டே இந்த நம்பருக்கு ஒருக்கா சிலோனுக்கு எடு மச்சான் என்றான் சிவா.

நம்பரை சுழற்றிய சிறிது நேரத்தில்

கலோ ...

நான் லண்டனில் இருந்து கதைக்கிறன் அங்கை மாணிக்கவாசகர் என்றவர் இருக்கிறாரா என்றான் நேசன் பதிலைத் தொடர்ந்து என்ன அண்ணை நடந்தது? கேள்வியை தொடர்ந்து இலங்கை முனை பதிலை அரம்பித்தது

இண்டைக்கு காலேலை வழக்கமாய் ஆஸ்பத்திரிக்கு போறவழியிலதான்

வழியில என்ன நடந்தது , நேசன்.

வழமை மாதிரித்தான் செல்ஒன்று அடிச்சவங்கள் ஆளை அடையாளம் காணேலாத மாதிரி ...என்று இழுத்தான் மாணிக்கவாசகர் . சில வினாடிகள் இரு பக்கமும் மௌனம் ..மீண் டும் மௌனத்தைக் கலைத்தார் மாணிக்கவாசகர் தம்பி. அவனை ஒருமாதிரி ஆறுதல் படுத்துங்கோ தம்பி. அவன் உடனை இங்கை வரப்பாப்பான் தெரியும் தானே தம்பி இங்கவந்தால் ....சரி தம்பி நான் அங்கை போகவேணும் பிந்தினால் பஸ் எடுப்பதும் கஸ்டம் நான் ஆறுதலாய் அவனுக்கு எழுதிறன் என்று சொல்லுங்கோ சொல்லவும் தொலைபேசி நிற்கவும் சரியாக இருந்தது ஆறுதல் எப்படிச் சொல்லுவது ? எதைச்சொல்லுவது இறந்தவள் பத்து வருடங்களாக இதயக்கதவுகளைப் பூட்டி வாழ்ந்தவள். கிழமை நாட்கள் வேண்டுமானால் வராமல் போகலாம் அவள் கடிதங்கள் கிழமைக்கு இரண்டாவது வரும் வரும் நேரம் எல்லாம் அவனைப்பற்றியே பேசுவான் வினோ இந்த சில வருடங கள் பழகிய இந்த மூவருக்குமே தாங்க முடியவில்லை என்றால் அவனால் எப்படித் தாங்க முடியும் வினோ வாய்விட்டு அழுது கொண்டிருந்தான்.

அவனருகிலே மூவரும் அமைதியாய் அமர்ந் திருந்தார்கள். வினோ, சரி நடந்தது நடந்து போச்சு நாங்கள் குடுத்து வைத்தது அவ்வளவுதான். என்ன செய்வது, தலைவிதியை நொந்து இருக்க வேண்டியதுதான். இப்ப அங்கை இருக்கிற நிலமையிலே நீ அங்கே போக ஏலாது. வீணா வீட்டாக்களுக்கு பிரச்சனை.

வெளிநாடு என்று வந்திட்டால் இதுகளை சகிக்கத்தான் வேணும். ஏதோ தன்னால் இயன்றவரை வார்த்தைகளால் கொட்டினான் சிவா .

மறு நாள் காலையில் லண்டனில் சகலபகுதிகளிலும் இருந்தும் வினோவின் நண்பர்கள் வருவதும் போவதுமாக இருந்தார்கள். இரண்டு நாட்கள் விரைந்தன. அன்னமோ தண்ணீரோ இன்றித் தலையணையில் முகம் புதைத்துப் படுத்திருந்தான் வினோ .

நண்பர்கள் மூவரின் வற்புறுத்தலின் பேரில் எழுந்து கட்டிலில் சாய்ந்தான், படுத்திருந்த வினோ. என் சகோதரிகளின் கடமையை நிறை வேற்றி விட்டேன் அப்பா அம்மாவுக்கு நல்ல சந்தோசம்

என்னை உவ்விடம் வரும்படியும் உமக்கும் எனக்கும் திருமணத்தை தான் நடத்த ஆசைப் படுவதாகவும் அப்பா எழுதியிருக்கிறார் எனவே பெரும்பாலும் இன்னும் இரு மாதங்களில் உவ்விடம் வருவேன் என்று தன் காதலிக்கு எழுதி, அனுப் புவதற்காக மடித்து மேசைமீது வைத்திருந்த கடிதம் ஜன்னலினூடாக வந்த மேல்லிய காற்றிலே ஆடிக்கொண்டிருப்பதை கண்ணிமைக்காது கண்ணிரண்டிலும் இருந்து கண்ணீர் ஒடப் பார்த்துக் கொண்டிருந்தான் வினோ.

சிவா எழுந்து போய் தேனீர் போட்டு வந்து வினோவிடம் கொடுத்து இதையாவது குடி என்றான்.நண்பர்களின் வேண்டுகோளின்படி தேனீரைக் குடிக்க வாயினருகே கொண்டு போனபோது முன் கதவிலே ஏதோ சத்தம் கேட்டது. கதவை நோக்கிப் போன நேசன் பபிதாவின் கடிதத்துடன் திரும்பி வந்தான்.கையெழுத்தைப் பார்த்தவுடன் அழத்தொடங்கினான் வினோ. அழுதபடியே கடிதத்தை உடைத்து வாசித்தான் வினோ.

அன்புடன் வினோ!

இக்கடிதம் கிடைக்கும் போது நான் எப்படி இருப்பேனோ இல்லை உயிருடன் இருப்பேனோ என்று எனக்குத் தெரியாது. காரணம் இங்கு ஒரே பிரச்சனை.எனக்கு உங்களைப் பார்க்காமலே போய்விடுவேனோ என்று கொஞ்ச நாளாய் எனக்குப் பயமாய் இருக்குது.

நான் கடவுளை வேண்டுவதெல்லாம் உங்களை ஒருமுறை பார்க்க வேண்டும் என்பதுதான். சில வேளை இந்தக் கடிதம் கிடைக்கும் போது நான் வீட்டில் இருப்பேனோ தெரியாது. எங்கள் தெருவில் இதுவரை இருபது பேர்வரை இறந்து விட்டார்கள். முடிந்தால் நீங்கள் அண்மையில் எடுத்த படம் ஒன்று எனக்கு அனுப்பி விடுங்கள். வேறு இன்றி ,

அன்புடன் பபிதா.

கண்கள் இரண்டும் குளமாக கைகளில் இருந்து கடிதம் மெல்ல நழுவிக் கீழே விழ மறுபடி தலையணையைக் கட்டியணைத்தபடி குப்புறப் படுத்தான் வினோ.


(முற்றிற்று)

* யாவும் கற்பனை.

# இந்திய மேலாதிக்கமும் தமிழ் பேசும் மக்களின் விடுதலையும்!

சென்ற இதழ் தொடர்ச்சி

கோபு



இந்து மாசமுத்திரத்தில் இந்தியாவின் பாதுகாப்பைப் பொறுத்தமட்டில் இலங்கையில் இயற்கைத்துறை முகத்தினைக் கொண்ட திருக்கோணமலையானது ஒரு கேந்திர முக்கியத் துவமான இடமாக அமைந்துள்ளது. 1977இல் அமெரிக்க கைக்கூலியான U.N.Pகட்சி ஆட்சிக்கு வந்தது. இதனைத் தொடர்ந்து அமெரிக்க உளவு நிறுவனமும் (C.I.A), இஸ்ரேலிய உளவு நிறுவனமும் (மொசாட்) இலங்கையில் குடிவரத் தொடங்கியது. இது இலங்கைக்கும் இந்தியாவிற் குமிடையில் இருந்த நல்லுறவுகளைப் பாதிக்கத் தொடங்கியது. இலங் கையானது அமெரிக்க ஏகாதிபத்திய சக்திகளின் வயப்பட்டு வருதல், இந்தியப் பாதுகாப்பிற்கு பெரும் அச்சுறுத்தலாகவே இருந்து வருகின்றது. இந் நிலையைத் தகர்ப்பதற்கு மிகுந்த தருணத்தினை இந்தியா எதிர்பார்த்துக் கொண்டிருந்த வேளையில் தமிழ் பேசும் மக்களின் இலங்கை அரசுக்கெதிரான போராட்டம் சாதகமாக அமைந் திருக்கிறது.

இலங்கை சுதந்திரம் அடைந்த நாள் முதற் கொண்டு வெவ்வேறு கட்டங்களில் தமிழ் பேசும் மக்களின் நியாயமான உரிமைகள் பெரும்பான்மையான சிங்கள இனவாத அரசினால் காலத்திற்கு காலம் இனக் கலவரங்களை முடிக்கி விட்டும், தமிழ் பேசும் மக்களின் பிரதேசங்களில் திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களை நிறைவேற்றியும், தமிழ்பேசும் மக் களை அழித்தொழிக்கும் வேலைத்திட்டத்தில் இறங்கியமை யாவரும் அறிந்ததே தமிழ் பேசும் மக்களின் அரசிற்கெதிரான சாத்வீகப் போராட்டங்கள் அரசினால் முறியடிக்கப்பட்ட பொழுது தமிழ் பேசும் மக்கள் தங்களின் உரிமைகளை பாதுகாக்கும் பொருட்டு 1972 இல் ஆயுதப் போராட்டத்தில் காலடி எடுத்து வைக்கத் தொடங்கினார்கள். 1977இல் நடைபெற்ற தேர்தலில் தமிழ் ஈழக் கோரிக்கையை முன் வைத்து தமிழர் விடுதலைக் கூட்டணியானது (T.U.L.F) தமிழ் பேசும் பிரதேசங்களில் அமோக வெற்றியீட்டி பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியாக வந்தது யாவரும் அறிந்ததே!இதனைத் தொடர்ந்து தமிழ் சிங்கள இனக்கலவரம் இனவாத அரசினால் முடுக்கி விடப்பட்டது. இது தமிழ் பேசும் இளைஞர்களை ஆயுத ரீதியான போராட்டத்தின் மீது கூடிய கவனத்தினை ஈர்த்தது. இதனைத் தொடர்ந்து 1983இல் பாரியளவில் தமிழ் பேசும் மக்களின் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட இனப்படுகொலையைத் தொடர்ந்து மலையகப் பிரதேசங்களிலும் ஏனைய பிரதேசங்களில் இருந்தும் தமிழ் பேசும் மக்கள் தென்னிந்தியாவிற்கு படகுகள் மூலம் அகதிகளாக சென்றடைந்தார்கள். இச்சூழ்நிலையைப் பயன்படுத்தி இந்தியாவானது அகதிகளை ஆதரித்து உதவி புரிவதுடன் இலங்கையில் பிரஜாவுரிமை வழங்கப்படாத இந்திய தமிழ் பேசும் வம்சாவழியினரான மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் கடமை இந்தி யாவிற்கு இருப்பதாகவும், தென்னிந்தியாவிற்கு வந்தடைந்த அகதிகளின் பிரச்சனை தீர்க்கப்பட வேண்டும் எனவும் கூறிக்கொண்டு இலங்கைப் பிரச்சனையில் தன் தலையீட்டை (உலகுக்கு தனது வெகு சனத் தொடர்பு சாதனங்களைப் பயன்படுத்தி) வெளிக்கொணர்ந்து நியாயப்படுத்தியது.

இக்காலகட்டத்தில் இலங்கையில் அரசுக்கெதிரான ஆயுதப் போராட்டத்தில் தமிழ் பேசும் மக்களைடையே வேறுபட்ட கருத்துக்களைக் கொண்ட அமைப்புக்கள் ஆயுத ரீதியாக வளர்ந்து கொண்டு வந்தன. இவ் வமைப்புக்களின் தன்னிச்சையான வளர்ச்சி நீண்ட

காலத்தில் இந்தியாவிற்கு தலையிடியாக அமையும் என எண்ணிய இந்தியா ஐந்துபெரும் ஆயுதப் போராட்ட அமைப்புகளை தேர்ந்தெடுத்து இந்தியாவில் தளங்களை அமைப்பதற்கு உதவி புரிவதுடன் ராணுவரீதியான பயிற்சிகளையும் சமபங்கில் வழங்குவதுடன் ஆயுதங்களையும் வழங்கி இவ்வைந்து அமைப்புக்களையும் ஒன்றுக்கொன்று சமபலத்தில் உருவாக்கி விட்டதுடன் தனது முழு ஊடுருவலையும் திறம்படச் செய்து கொண்டது.

இவ்விடத்தில் இந்தியாவானது தமிழ்பேசும் மக்களின் போராட்டத்திற்கு உதவி செய்திருக்கின்றது என்பதைவிட ஐந்து சமபலம் கொண்ட ஓர் தலைமைத்துவ போட்டியினைக் கொண்ட வீக்கமடைந்த அமைப்புக்களை உருவாக்கி இருக்கின்றது என்பதே பொருத்தமாகும். இந்நிலையில் இவ்வமைப்புக்களுக்கிடையிலான ஆயுத ரீதியான முரண்பாடுகள் தவிர்க்க முடியாததாகி விட்டதுடன் தமிழ் பேசும் மக்களின் போராட்டம் பின் தள்ளப்பட்டுள்ளது. இந்நிலைமையை உணர்ந்து கொள்ளாத போராட்ட அமைப்புக்கள், இந்தியா எங்களுக்கு நாடு அமைத்துக் கொடுக்கப் போகின்றது ,மக்களே ஒன்று கூடுங்கள் எனக் கூச்சல் இட்டுக் கொண்டிருக்கின்றது. மக்களோ இந்தியா பங்களா தேசை விடுவித்தது போல் எங்களுக்கும் தமிழ் ஈழத்தினை பெற்றுத்தரும் என முழுக்க முழுக்க நம்பியிருந்தார்கள்.என்ன இருந்தாலும் இரவல்ப்படையினால் புரட்சி நடந்தால் சுவாரசியமான விடயம் தானே.இதனால்ப் போராளிகள் என்ன மாதிரிப் போரிட்டாலும் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் இந்தியாவின் தலையீடில்லாமல் எங்கள் போராட்டம் வெற்றி பெற மாட்டாது என்ற எண்ணம் மக்கள் மத்தியில் பாரியளவில் வளர்க்கப்பட்டுவிட்டது. இந்நிலை போராட்ட அமைப்புகளுக்கு ஒரு பெரும் தோல்வி என்று உணராமையே இவ்வமைப்புக்கள் மக்கள் மத்தியிலிருந்து அந்நியப்படுத்தப்பட்டமைக்குக் காரணமாகும். இந்தியாவானது தன்னை ஒரு புரட்சிகர சக்தி என வெளியுலகிற்கும் தமிழ் பேசும் மக்களிற்கும் காட்டிக் கொண்டு தமிழ் பேசும் மக்களின்விருப்பத்தின் பேரிலேயே அவர்களின் பிரச்சனையில் தான் தலையிடுவதாக வெற்றிகரமாக வெளிக்காட்டிக் கொண்டது.

இலங்கை விடயத்தில் இந்தியா ஏன் இவ்வளவு சிக்கலான விளையாட்டை ஆடவேண்டும் என்றால் முதலாவதாக இலங்கையில் அமெரிக்க இஸ்ரேலிய ஊடுருவலை முற்று முழுவதாக அகற்ற வேண்டும்.இரண்டாவதாக இலங்கை பூரகவோ அல்லது பகுதியாகவோ புரட்சி நடைபெற்றால் குறிப்பாகத் தமிழ் ஈழம் வெற்றி பெறுமானால், நீண்ட காலத்தில் இந்தியப் பிரதேசத்தின் ஒருமைப்பாட்டிற்கு குந்தகமாக அமைந்துவிடும். 1971ம் ஆண்டிலிருந்து 1974ம் ஆண்டுப் பகுதியில் இலங்கையில் சிறிமாவோ அரசினால் கட்டுப்படுத்த முடியாது வளர்ந்து கொண்டிருந்த J.V.P இன் (ஜனதா விமுக்திப் பெரமுன ) நாடளாவிய புரட்சியை அரசுக்கு உதவி புரிவதாக கூறிக்கொண்டு இந்தியாவானது விழுந்தடித்து இலங்கையில் தனது இராணுவத்தை இறக்கி ஏறத்தாழ பத்தாயிரம் சிங்கள மக்களை கொன்று குவித்து அப்புரட்சியினை முறியடித்தது. இச்சம்பவம் பெரும்பான்மையான சிங்கள மக்களின் மனதிலிருந்து அகலவில்லை.இப்பொழுது தமிழ்ப் போராட்டத்தில் தமிழ் பேசும் மக்களுக்கென்று ஒரு பாதுகாப்பான பிரதேசம் அமைக்கப்பட்டால் இது நீண்ட காலமாக வட இந்திய எதிர்ப்பு வாதத்தில் வளர்ந்திருக்கும் ஐந்து கோடி தமிழ்பேசும் மக்களைக் கொண்ட தமிழ்நாடு(தென்னிந்தியா) ஒரு தனிநாட்டுக் கோரிக்கையினை முன் வைப்பதற்கு உந்துதலாக இருக்குமென நினைத்த இந்தியா இலங்கையில் தமிழ் பேசும் மக்களின் போராட்டம் ஒரு முற்றுப் பெற முடியாததாக இருப்பதுடன், இலங்கை அரசு தனது கைக்குள் வரும்வரை இராணுவ ரீதியான பிரச்சனையை கொடுப்பதற்கு தமிழ் பேசும் மக்களிடையே உள்ள சில போராட்ட அமைப்புக்களை நன்கு பயன்படுத்துகிறது.

போராட்ட அமைப்புக்களிற்கிடையில் தலைமைத்துவ அதிகார அடிபாடுகள் இருக்கின்ற வேளையில் சில அமைப்புக்கள் இந்தியாவின் கையிலிருந்து விடுவிக்கப்பட்டுத் தம்மைமேலும் இராணுவ ரீதியாக பலப்படுத்திக் கொண்டு வந்தமையும் இந்தியக் கட்டுப்பாட்டிலிருந்த சில அமைப்புக்கள் அமைப்புக்களிடையே இருந்த பகைமை அடிப்பாட்டில் அழிந்தொழிந்தமையும் தமிழ் பேசும் மக்களின் அபிலாசையான இந்திய இராணுவத் தலையீட்டுத் தன்மையையும் இந்திய இராணுவம் தன்னை அமைதி காக்கும் படை என வெளி உலகிற்குக் காட்டிக்கொண்டு இலங்கையின் தமிழ்ப் பிரதேசங்களில் காலடி வைத்துக் கொண்டது. இந்திய இராணுவம் காங்கேசன்துறையிலிருந்து யாழ்ப்பாணம் சென்றடைவதற்கு சுமார் ஆறு தொடக்கம் ஏழு மணித்தியாலங்கள் எடுத்ததாம்.இது இராணுவ கெடுபிடியில் ஏற்பட்ட நேர தாமதமல்ல.எம்மக்களின் வரவேற்பினால் எடுத்த நேர தாமதமே.இங்கே என்ன உணரக்கூடியதென்றால் எந்த ஒரு போராட்ட சக்திகளும் இந்தியாவின் எண்ணத்தைப் பற்றி மக்களிடையே தெளிவாக எடுத்துக் கூறவில்லை. இதே நேரம் 29ம் திகதி ஆடிமாதம் 1987ம் ஆண்டு அன்று இந்தியப் பிரதமர் ரஜீவ் காந்தியும் இலங்கை ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனாவும் இலங்கை இந்திய அமைதி காக்கும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டார்கள். இந்த ஒப்பந்த்தில்

1) வடக்கு கிழக்கு சேர்ந்த ஒரு நிர்வாகம் ஒரு சுயேட்சையான ஒரு தேர்தல் வடக்கு கிழக்கு பகுதியில் நடைபெறும்வரை இருக்க வேண்டும்.

2) மாகாணசபைத் தேர்தல் நடாத்தும் வரை ஓர் இடைக்கால அரசு நிறுவப்பட வேண்டும்.

3) வடக்கு கிழக்கு மாகாணங்களில்லுள்ள அவரசகாலச் சட்டம் நீக்கப் பட வேண்டும்.

4) யுத்த நிறுத்தம் செய்யப்பட வேண்டும்.

5) தமிழ் பேசும் இராணுவ குழுக்களிடம் இருந்து ஆயுதக்கையளிப்பு நடைபெற வேண்டும்.

6) இலங்கை இராணுவம் தமது முகாம்களினுள் இருக்க வேண்டும். அத்துடன் இலங்கை அரசே வடக்கு கிழக்கு மாகாணங்களின் பாதுகாற்பிற்கும் சட்ட ஒழுங்கு நடவடிக்கைகளுக்கும் பொறுப்பாகும்.

7) அரசியல் கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்குதல்.

8) இந்திய அரசானது மேற்கூறிய விடயங்களை அமுல் படுத்துவதற்கு இராணுவரீதியான உதவிகள் அனைத்தினையும் வழங்கும்.மேலும் இவ் ஒப்பந்தத்தில் மிகவும் கவனத்திற்குரிய பகுதிகள் கீழ் வருமாறு

1) வேலைக்கமர்த்திய வெளிநாட்டு இராணுவ உளவு நிபுணர்கள் இந்திய இலங்கை ஒப்பந்தத்திற்கு இடையூறாக இருத்தல் கூடாது.

2) இந்திய கவனத்திற்கும் திருகோணமலைத் துறைமுகம் எந்தவொரு வெளிநாட்டின் இராணுவரீதியான பாவனைக்குரிய வசதி கொடுக்கக் கூடாது.

3) இந்திய இலங்கை கூட்டான முயற்சியில் திருகோணமலை எண்ணெய் ராங் பண்ணையினை **(oil tank farm)** நடத்துவற்கான வேலைத் திட்டத்தினை முன் போடல்.

4) இலங்கையானது வெளிநாட்டு ஒலிபரப்பு ஸ்தாபனத்துடன் செய்து கொண்ட ஒப்பத்தத்தை மீளாய்வு செய்து ஒலிபரப்பானது தனித்துவமான மக்கள் ஒலிபரப்பு ஸ்தாபனமாகவே இருக்க வேண்டுமேயன்றி இராணுவ உளவு நோக்கங்களாக இருக்கக் கூடாது.

மேற்கூறியவற்றைப் பார்க்கும் போது இந்தியஅரசு தமிழ் பேசும் மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் எந்தவொரு அம்சத்தினையோ அல்லது தமிழ் பேசும் மக்களின் பிரதேசங்களில் நடாத்தப்படும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை நிறுத்துவதற்குரிய எந்தவொரு அம்சங்களும் இவ் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடப்படவில்லை. இதிலிருந்து என்ன தெரிகின்றதென்றால் இந்தியா தன்னை ஓர் நண்பனாக காட்டிக் கொண்டு இலங்கை மீதான தனது ஆதிகத்தினை இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி ஓர் அணிவகுப்பில் சிங்கள கடற்படை வீரனிடம் துவக்கின் பின்பகுதியினால் அடிவாங்கிக் கொண்டும் கூட நிலை நாட்டியிருக்கின்றது. இந்திய இராணுவம் இலங்கையில் இருக்கின்ற காலத்தில் பெரும் பான்மையான தமிழ் போராட்ட அமைப்புக்களையும் பழைய மேடைப் பேச்சு வீரர்களையும் தான் நினைத்தபடி ஆட்டிக் கொண்டு அவற்றின் இராணுவ பலத்தையும் குறைத்து வைத்திருந்தது. இந்திய இராணுவத்தினர் உண்மையான கோரப்பற்களை அப்பாவி மக்களை சிறை செய்தும் அவர்களை கொன்றும் பெண்களைப் பலாத்காரப்படுத்தியும் (இலங்கை இராணுவத்தினை விட விகிதாசாரம் கூட) சிப்பாய்கள் தமிழ் பேசும் பெண்களை கட்டாய திருமணங்கள் செய்து கொண்டும் மக்கள் மத்தியில் அம்பலமாக்கியது. இந்திய இராணுவம் சில மணித்தியால நேரங்களுள் அனைத்து அமைப்புகளையும் தனது கட்டுப்பாட்டினுள் கொண்டுவரலாம் என எண்ணி தனது இராணுவ கெடுபிடியில் இறங்கி தோல்வி காணவே தனது கைகளினுள் இருக்கும் அமைப்புக்களை ஆயுதமயப்படுத்தி மீண்டும் நாட்டினுள் விட்டு அமைப்புக்களுக்கிடையிலான மோதலை அதிகரிக்கச் செய்தது. இதில் அப்பாவிப் பொது மக்கள் அமைப்புக்களினால் கொல்லப்பட்டும் மாறி மாறி சிறை படுத்தப்பட்டும் பல துன்பங்களுக்குள்ளாக்கப் பட்டனர். இப் போக்கானது மக்களது விடுதலை உணர்வை மழுங்கடித்தும் அதன் மீதான வெறுப்புணர்வையும் அதிகரிக்கச் செய்தது.

இது இவ்வாறு இருக்கின்ற போது சிங்கள பகுதிகளில் இந்திய எதிர்ப்புணர்வுகள் வளரத் தொடங்கின. இது மீண்டும் **J.V.P** இனது வளர்ச்சியை கூட்டியது. இலங்கை அரசிற்கு சவாலான சக்தி சிங்கள மக்களிடையே வளர்ந்து வருதல் இலங்கையரசிற்கு அச்சுறுத்தலாக இருந்தமையினால் இலங்கை அரசு இந்திய வெளியேற்றத்தினைக் கேட்டதோடு வடக்கு கிழக்கு பகுதிகளில் இந்தியாவின் செல்வாக்கு குறைந்து வந்தது. இது இந்தியாவிற்கு இந்து சமுத்திரத்தில் நல்லதோர் வளர்சியல்ல.

இதே காலத்தில் இந்தியாவின் பாராளுமன்றத் தேர்தலில் ராஜீவின் கட்சியான இந்திரா காங்கிரஸ் தோல்வியுற்று **V.P** சிங்கினைப் பிரதமராகக் கொண்ட கூட்டாட்சி தோன்றியது. இவர்கள் இலங்கை விவகாரத்தில் இலங்கை இந்திய ஒப்பந்தம் அவ்வாறிருக்க தாம் இராணுவத்தை வாபஸ் பெறுவதாக அறிவித்து 1989 இன் பிற்பகுதியில் இராணுவத்தினை முற்றாக வாபஸ் பெற்றார்கள். இது இந்திய அரசு மாற்றத்தினால் நடைபெற்றது எனக் கூறுவதை விட இந்திய அரசினால் எதிர் பார்த்த விடயங்கள் இலங்கை விவகாரத்தில் தலைகீழாக நடந்தபடியால் தன் செல்வாக்கினை இலங்கை விவகாரத்தில் இழந்து கொள்வதை தடுக்கும் முகமாகவே இராணுவத்தினை வாபஸ் பெற்றது. இவற்றினை படிப்பினையாக வைத்துக் கொண்டு இந்தியாவின் உண்மையான எண்ணம் என்ன என்பதனை நாம் உணர்ந்து கொள்ளத் தவறக்கூடாது.

அனைத்து முதலாளித்துவ அரசுகளும் போராட்ட உச்சக் காலகட்டத்தில் மக்களுக்கு உரிமை வழங்கினோம் எனக் கூறிக் கொண்டு உண்மையான போராட்டக் காரணங்களை மறைத்து வைத்துக் கொண்டு மக்களுக்கு ஏற்பட்ட நெருக்கடிகளை தீர்க்கின்ற பூதகரமான திட்டத்துடன் உரிமைகளை வழங்குகின்றோம் என ஒடோடி வரும். இவ் விடயத்தில் இவ்வரசுகளின் இப் பிரயத்தனத்தின் உள் நோக்கங்களை நாங்கள் இனங்காணத் தவறக் கூடாது.

முற்றும். 'கோபு'

# பச்சோந்தி

அந்தி

இந்த இனம் எங்கு சென்றாலும் மற்றவர்களுக்கு ஏற்ற மாதிரியோ அல்லது இடங்களுக்கு ஏற்ற மாதிரியோ தன்னை மாற்றி அமைத்து தனது காரியம் பார்க்கக் கூடியது.

இங்கு சிலர் இருக்கிறார்கள் பல்வேறுபட்ட மொழிகளில் பலருடன் விவாதம் புரிந்து தங்களுடைய பலாபலன்களை பெற்றுக்கொள்வர். இவர்களை நீங்களே இனம் கண்டு கொள்ளுங்கள்.

திருமணத் தரகர்கள் ..... சில வேலைகளை செய்து கொண்டு இருக்கிறார்கள். இவர்களும் கூட அந்த வகைகள்..... இதற்கு வள்ளுவன் வாக்கு ஈடுகொடுக்குமா?

இன்று அமெரிக்காவும், பிரிட்டனும் வளைகுடா யுத்தத்தில் தலையையும், வாலையும் ஆட்டுகிறார்கள் அது ஏன்? குவைத் மக்களுக்காகவா அல்லது மூன்றாம் உலக நாடுகளுக்காகவா?
சோழியன் குடும்பி சும்மா ஆடாது என்பார்கள் இந்த இடத்தில் அது உண்மையா?

**1983**ல் இலங்கையில் நடந்த இனக்கலவரத்தில் கொழும்பில் இருந்த தமிழர்களின் பல மொத்த வியாபார நிலையங்கள், பண்டகசாலைகள் தீ வைக்கப்பட்டன. ஆனால் அடுத்த இரண்டு வாரங்களில் மாண்புமிகு பிரதமர் அவர்கள் திறந்து வைத்தார் என்பது பெருமை. ஆனால் அது ஏன் எதற்காக உடனடியாக திறந்துவைக்கப்பட்டது. சிந்தியுங்கள் உங்கள் கருத்துக்களை தெரிவியுங்கள். அதுவும் ஒரு வகையில்.......

இந்தியாவில் மிகவும் பிரபல்யமான மதுரை மீனாட்சி அம்மன் கோவில் காணிக்கையில் **1977**ல் ஒரு தங்கத்தினால் செய்யப்பட்ட ஏரும், மண்வெட்டியும் காணப்பட்டது. இவை இரண்டும் விலை மதிக்க முடியாதவை. இதன் ஆராச்சியின் முடிவு கடத்தல் வியாபாரத்தில் ஈடுபடுபவர்களின் காணிக்கை என்பது. இந்த சம்பவத்தில் ஒரு சந்தேகம் இறைவன் கூட.....

இதன் மறுபுறத்தில் ஜேர்மனியில் கிட்லர், இத்தாலியில் முசோலினி, ரஷ்யாவில் லெனின், சீனாவில் மாஓசேதுங், இந்தியாவில் மகாத்மா காந்தி இலங்கை, பிரச்சனைக்கு தீர்வுகாண வந்த பார்த்தசாரதி இவர்கள் எல்லாம் பச்சோந்திகளா? இவர்களை இனம் காணுங்கள்.

இன்றைய நவீன உலகிலே பொருளாதாரக் கஸ்டங்கள் நிறைந்த நேரத்திலே பச்சோந்திகளாக வாழ்ந்தால்த்தான் பொருந்தும் அல்லவா? இதற்கு உங்கள் கருத்துக்கள் என்ன?

O

## சிறுவர் பகுதி

# நாம் எமது மூளையை எவ்வகைகளில் உபயோகப்படுத்துகிறோம்?

நாம் எமது மூளையை எவ்வகைகளில் உபயோகப்படுத்துகிறோம்?

* ஏன் சந்திரன் சூரியன் வானத்தில் உள்ளன?
* எவ்விதம் கண்ணீர் துளிகள் கண்களில் இருந்து வருகின்றன?
* காற்றாடி எவ்விதம் வானத்தில் உயரப்பறக்கிறது?
* முட்டையிலிருந்து குஞ்சு வந்ததா? கோழியிலிருந்து முட்டை முதலில் வந்ததா?

இவ்விதம் பல கேள்விகளும் அக்கேள்விகளை பல கோணங்களில் எமது மூளையே சிந்தித்து விடைகளும் காணுகிறது. நீங்கள் எப்போதாவது சிந்திப் பதை நிறுத்தியுள்ளீர்களா? ஏன் சிந்திக்கிறீர்கள்? எவ்விதம் சிந்திக்க முடிகிறது? சிந்திப்பது எவ்வளவு முக்கியமானது? நாம் குழந்தைப் பருவத்தில் பல விடயங்களை எமது தாய், தந்தை, பாடசாலை, சூழல் போன்றவற்றிலிருந்து கற்பதன் மூலமும் தொடர்ச்சியாக அதனை பிரயோகித்து அலசி பல கோணங்களில் ஆராய்ந்து விட்ட பிழைகளிலிருந்து புதிய பதில்களைப் பெறுவதன் மூலம் நாம் எமது மூதாதையரிலும் பார்க்க மூளையை உபயோகப் படுத்தும் விதத்தில் மேம்படுகின்றோம். எனினும் ஒரு சாதாரண மனிதன் தனது மூளையின் ஒரு சிறு வீதத்தையே உபயோகப்படுத்துகிறான் என்பது ஆராச்சிகளின் மூலம் தெரிய வந்துள்ளது.

மேற்கூறியவற்றை தவிர மூளையானது எமது உடம்புக்கு வெளியில் (சூழல்) என்ன நடக்கிறது என்பதை ஐம்புலன்களால் (கண், மூக்கு, நாக்கு, காது, மெய்) அறிகிறது. சில தொழிற்பாடுகள் 'முண்ணானால்' கட்டுப்படுத்தப்படுகிறது. உதாரணமாக காலில் முள்ளுக் குற்றும்போது எம்மையறியாமலேயே எமது கை அவ்விடத்தை நோக்கி விரைகிறது. எவ்விதம் மற்றைய உறுப்புக்கள் இருந்தாலும் மூளையும் இருதயமுமே எம்முடைய உடம்பில் உள்ள முக்கிய உறுப்புக்களாகும்.

* ஒருவர் தலையை உபயோகப்படுத்தும் என்றால் மூளையை உபயோகப்படுத்தும் என்பதே கருத்தாகும்.
*

---

### சரியான விடையின் கீழ் கீறிடுக.

1) மா+இலை

1.மாஇலை 2.மாவிலை 3.மாயிலை 4.மாதிலை

2) இரத்தம் என்பதன் ஒத்த பொருள்

1.நீர் 2.கனகம் 3.பருதி 4.மேற்கூறியவை ஒன்றுமல்ல.

3) பசுவின் இளையது கன்று போல் தென்னையின் இளையது

1.வடலி 2.பிள்ளை 3.கன்று 4.மரம்

4) வீரன் என்பதன் பெண்பால்

1.வீரி 2.துணிச்சல்காரி 3.வீராங்கனை 4.தைரியக்காரி.

5) கைகலத்தல் என்றால்

1.இரண்டு கைகள் கலத்தல் 2.தண்ணீரில் கைகளைக் கலத்தல் 3.சண்டையிடல் 4.கைகுலுக்குதல்

# பாலருக்கும் தமிழ் எழுத விரும்புபவர்களுக்கும் உயிர் எழுத்து.

கடந்த இதழில் உயிர் எழுத்துக்களான அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ,ஐ, ஒ, ஓ, ஔ எனும் பன்னிரண்டு எழுத்துக்களையும் ஆயுத எழுத்தான ஃ ஐயும் பார்த்தோம். இவற்றை க் கொண்டு தொடங்கும் சில வினைச் சொற்களை இனிக் கவனிப்போம்.

அ - அடி - **Beat**
அனுப்பு - **Send**

ஆ - ஆடு - **Dance**
ஆட்டுதல் - **Swing**

இ - இரு - **Sit**
இழு - **Pull**

ஈ - ஈன் - **Give birth**
ஈடுபடு - **Involve**

உ - உடு - **Wear**
உரி - **Strip**

ஊ - ஊது - **Blow**
ஊற்று - **Pour**

எ - எடு - **Take**
எறி - **Throw**

ஏ - ஏமாற்று - **Deceive**
ஏறு - **Climb**

ஐ - ஐயப்படு - **Fear**
ஐக்கியபடு - **Unite**

ஒ - ஒன்றுகூடு - **Gather**
ஒட்டு - **Stick**

ஓ - ஓடு - **Run**
ஓலமிடு - **Scream**

ஔ - இதில் வினைச் சொற்கள் வருவது குறைவு.

---

1) உலகத்தில் உள்ள பெரிய மலை எது?


2) இலங்கையில் நீளமான நதி எது?

3) உலகில்ப் பொருளாதார உற்பத்தி வீதம் கூடிய நாடு எது?

4) இலங்கையின் நீளம் எவ்வளவு? அகலம் எவ்வளவு?

5) இலங்கையின் வடக்கு கிழக்குகளிலுள்ள 5 மாவட்டங்களின் பெயர்கள் தருக.

# பெண்கள் உலகம்



வெளிஉலகம் எவ்வாறு பெண்களை பார்க்கிறது/ பாதிக்கிறது என்பதனைக் காணப்புகுவோம். முதலில் விளையாட்டுக்கள்.

விளையாட்டில் பாகுபாடுகள்:

பாகுபாடுதான் பிறப்பிலேயே தொடங்கி விட்டதே! விளையாட்டுக்களில் அது எப்படி இல்லாமல் போகும்? சிறுவர்களுக்கும் சிறுமிகளுக்கும் இங்கு விளையாட்டுக்கள் கூடப் பொதுவல்ல. குழந்தைப் பருவத்திலேயே பாலியல் ரீதியான பிரிவினையை உலகம் சொல்லிக் கொடுக்க ஆரம்பித்து விடுகிறது. பெண் குழந்தைகளின் விளையாட்டுப் பொருட்களாக பொம்மைகள், சிறிய சிட்டிகள் (சமையல் ப்பாத்திரங்கள்) வாங்கிக் கொடுப்பதும் பையன்களாக இருந்தால் கார், விமானம், பந்து போன்ற பொருட்கள் வாங்கிக் கொடுப்பதும் நமது மரபு ரீதியான பழக்கங்களாகும். இப்பொழுது ஓரளவு இந்நிலை மாறியிருப்பினும் அடிப்படையான இந்தச் சிந்தனை மாறியிருப்பதாக கொள்ள இயலாது. மாறாக, நவீன வளர்ச்சிகள் சிட்டிபானை, செப்பு, வடிவங்களை மண்பாண்டம் பித்தளையிலிருந்து எளிதாகக் கையாளக்கூடிய பிளாஸ்ரிக், எவர்சில்வர் வடிவங் களில் கொண்டு வந்திருக்கின்றன. குட்டிக் குட்டி காஸ் அடுப்பும், மிக்ஸி கிரைண்டர்களும் சிறுமியர் உலகத்தின் புது வரவுகள். ஆம் நேற்றுஉலகமாகக் கற்பிக்கப்பட்டது மண்பானையும் விறகு அடுப்பும்..... இன்று மிக்ஸியும் காஸ் அடுப்பும்...... வடிவம்தான் வேறு. அவள் உலகின் எல்லைக்கல் அன்றும் என்றும் சமையல்தான்.

இந்தக் குழந்தைப் பருவத்தைத் தாண்டி விளையாடும் பருவத்தில் நடப்பதென்ன? சடுகுடு, கோலிக்குண்டு பம்பரம், கிட்டியடிப்பது போன்ற உடல் பலத்தையும் மனபலத்தையும் ஒருங்கே வளர்க்கும் விளையாட்டுகள் சிறுவர்களுக்கு சொந்தமானவை. ஊஞ்சல், தாயம், பல்லாங்குளி, தட்டாங்கல்போன்ற வீட்டுக்குள்ளேயே விளையாடும் விளையாட்டுக்கள் பெண்களு டையவை. விதிவிலக்காக (நொண்டி யடித்தல், ஸ்கிப்பிங் (கயிறுதாண்டுதல்) போன்ற சில விளையாட்டுக்கள் இருப்பினும் மிகக் குறுகிய காலத்திலேயே அவற்றுக்கான அனுமதி நிறுத்தப்பட்டு விடும். பத்து வயதிலிருந்தே குதிப்பது என்ன அதிர்ந்து வேகமாக நடப்பது கூடப் பெண்கள் செய்யக் கூடாதவை என்ற போதனை அமைதியாகக் கூடஅல்ல அதட்டல்மூலம் அடக்குமுறையாகவே ஆரம்பமாகிவிடும். சிறுவர் சிறுமியர் சேர்ந்து விளையாடுவது என்பது மிகையாகப் போனால்க்கூட பத்து வயதிற்குள் பெரும்பாலும் முடிந்துவிடும்.

நமது தெருக்களில் நிலவும் விளையாட்டுச் சூழலையே நாம் மேலே கண்டோம். சரி இவற்றின் விளைவு என்ன? பெரும்பாலும் பத்துப்பேர் சேர்ந்து குழுவாக விளையாடுபவர்கள் சிறுவர்கள். இவ்விளை யாட்டுத்தான் முதன்முதலில் அவர்கள் மனத்தில் குடும்பத்தைத் தாண்டி சமூகம் இருப்பதையும் அத்தோடு தான் இணைய வேண்டிய அவசியத்தையும் அவனுக்கு உணர்த்துகிறது. வெற்றி தோல்வியின் சாதாரண தன்மைகளை விளக்குகிறது. நாம் பலமுள்ளனவாகவும் வெற்றி பெறுவனவாகவும் மற்றவர்களால் ஏற்றுக்கொள்ளப்படக் கூடியனவாகவும் வளர வேண்டிய ஆசையை அவனுக்குள் ஏற் படுத்துகிறது. ஆம் வெறும் அம்மா, அப்பா உடன்பிறப்புக்கள் உலகமல்ல. அவனுக்கு இந்த உண்மை இளம்வயதிலே புரிந்துவிடுகிறது. அவனுக் கென்று தனி அனுபவங்கள், வெற்றி தோல்விகள் சண்டைகள், சமாதானங்கள் இப்போதே ஆரம்பமாகி வருகின்றன.

ஆனால்ப் பெண்களின் விளையாட்டுகள் பெரும்பாலும் ஓரிரண்டு பேர் வீட்டுக்குள் அமர்ந்து விளையாடுபவை. குழுத்தன்மை மிகமிகக்குறைவு. குறுகிய தன்மைகளையே இவ் விளையாட்டுக்களும் கொண்டிருக்கும். இவ்விளை யாட்டுக்களையும் பல வீடுகளில் வீட்டுக்காகாது, குடும்பத்திற்கு ஆகாது, பொழுது போச்சு, தரையைத்தேய்க்கக்கூடாது இப் படிப்பல பல வசவுகளை சொல்லிப் பெரியவர்கள்

நிறுத்திவிடுவதுண்டு. ஏனெனில் சிறுமியர்களுக்கு அதிகமாக விளையாட்டில் ஆர்வம் ஏற்பட்டால் பொறுப்பாக வீட்டுவேலைகள் செய்யமாட்டார்கள் எனப்பெரியவர்கள் அஞ்சுவதும் இந்த ஏச்சுப் பேச்சுக்களுக்கு காரணமாகும். எனவே தங்களுக்கென ஒதுக் கப்பட்ட இந்த விளை யாட்டுக்களை விளையாடுவது கூடப்பாவம், தவறு என்ற பொதுவான குற்ற உணர்வும் பெண்கள் மத்தியில் உண்டு. எனவே பெரும்பகுதியான சிறுமியரின் நேரம் அம்மாவிற்கு உதவி செய்வதிலும் மீதி நேரங்களில் அம்மாவின் புடவைத் தலைப்பைப் பிடித்துக் கொண்டு அம்மா மற்றப் பெண்களிடம் பேசிக் கொண்டிருக்கும் வம்புப் பேச்சுக்களை (அதாவது புறங் கூறுதல்) கேட்பதிலேயே கழியும்.

தெருக்களில் நிலவும் சூழ்நிலையே நாம் மேலே கண்டோம் இனிப்பள்ளிகளில் நடாத்தப்படும் விளையாட்டுக்கள் குறித்து பார்ப்போம். முதலாவது பள் ளிகளில் அதிக மதிப்பெண் வாங்குவதுதான் மாணவியர்களிற்கு குறிக்கோளாக முன் வைக்கப் படுகிறது. விளையாட்டு ,பாட்டு மற்றகலைத்துறை சார்ந்த நடவடிக்கைகள் அவ்வப்போது ஊக்கு விக்கப்படுமே தவிர பாடத்திற்கு முன் இவை இரண்டாம் பட்சம் தான். இதைச்சுருக்கமாக சொல்ல வேண்டும் என்றால் மாணவர்களின் மாதாந்த அறிக்கையில் விளையாட்டு பாடத்திற்கு மதிப்பெண் கிடையாது.(வீட்டுக்கு அனுப்புவது) எனவே மிகச்சில மாணவியரே இவற்றில் ஆர்வத்துடன் கலந்து கொண்டு முன்னணிக்கு வருகிறார்கள். பெரும் பாலான மாணவியர் இவற்றை அலட்சியம் செய்வதுடன் பெரும்பாலும் ஒய்வு நேரங்களாக இவ்வகுப்புக்களை பயன்படுத்திக் கொள்கிறார்கள். ஓரளவு பரவலாக மாணவியர் விளையாட் டுத்துறையில்க் கலந்து கொள்வதும் பெண்களுக் கென்றே நடாத்தப்படும் தனிப்பள்ளிகளிலும் ,கல்லூரிகளிலும் மாத்திரமே **Co-Education** எனப்படும் இரு பாலாருக்கும் பொதுவாக நடாத்தப்படும் பள்ளிகளில் மாணவர்களின் அடாவடித்தனமான கிண்டல்களிற்குப் பயந்தும் இயல்பாகவே ஆக்கப் பட்டுவிட்ட கூச்ச சுபாவத்தினாலும், பெண்ணுக்குப் பெரிய அணிகலன் என்ற பெயரில் பூட்டப் பட்டிருக்கும் 'வெட்கம்' என்ற விலங்கினாலும் பெண்கள் அவ்வளவாக விளையாட்டுக்களிள் கலந்து கொள்வதில்லை.


விளையாட்டுத் துறையில் ஆர்வமுடன் பங்கெடுக்கும் அனைத்துப் பெண்களுக்கும் பள்ளி வளாகத்துக்குள் விளையாடும் அனுமதியைத்தாண்டி,மாவட்ட,மாநில ரீதியாக விளையாட்டுப் போட்டிகளில் வெளியூர் சென்று தங்கி விளையாட பெற்றோரிடமிருந்து அனுமதி கிடைப்பதில்லை. ஓரளவு நன்கு படித்த பெற்றோரிடமிருந்து மாத்திரமே பெண்களுக்கு இதற்கான அனுமதி கிடைக்கிறது.

ஆக மேற்கண்ட முடிவுகளிலிருந்து நாம் வந்தடையும் உண்மை என்னவென்றால் இக்கட்டுரையின் ஆரம் பத்தில்க் குறிப்பிட்ட தெருச்சூழல்கள் விளையாட் டுக்களினால் அமைக்கப்படும் மனப்பாங்கே பெண்ணு க்கும் ஆணுக்கும் ஆளப்பதிந்து விடுகிறது. பள்ளிக்கூடங்கள் இவற்றிலிருந்து சில விதி விலக்குகளை வளர்த்தெடுக்கத்தான் பயன்பட்டி ருக்கின்றனவே தவிர இப்பொது நியதிகளை அவை பெரிதாகத் தகர்த்து விட முடியவில்லை.

இந்நாட்டின் பெண் சிறார்களுக்கு ஆரோக்கியமான உடல்நிலையையும் அது சார்ந்த மனநிலையையும் அடைய முடியாமல் அவர்கள் உலகில்த்தான் எத்தனை தடைகள்? அவள் அவளாக உருவெடுக்கவே விடா மல் பூட்டப்படும் விலங்குகள்? இவர்கள் தானே நம் சந்ததியினரை தம் இரத்தத்திலிருந்தும் சதையிலி ருந்தும் உருவாக்கும் எதிர்காலத் தாய்மார்கள்.

இத்தடைகள் தகர்த்தப்படாமல் இவ்விலங்குகள் உடைக்கப்படாமல் நமது நாட்டின் பொது ஆரோக் கியமும் சுகாதாரமும் வளர்ச்சியடைவது எப்படிச் சாத்தியமாகும்? என்ற கேள்வியினை எழுப்பிப் பாருங்கள்.

- நன்றி: உதயன்



# தங்காலைச் சிறையுடைப்பு


"பாலன்"

அன்பர்களே!
உங்களை நான் சில ஆண்டுகளுக்கு பின் நோக்கி அழைத்து செல் ல வேண்டும் . அங்கே நீங்கள் நினைப்பது போன்று காலைகள் விடிந்திருக்காது. சிரிப்பொலிகள் கேட்டிருக்காது. மயான அமைதி. பயங்கர ஒலிகள் கிளம்பும் ஒரு இரத்தக் கண்ணீர் வடிந்த இரவுக ள், அங்குதான் போக வேண்டும். வாருங்கள் ஆனால் இதயக் கொதிப்பு அல்லது மாரடைப்பு உள்ளவர்கள் உங்களில் யாராவது இருந்தால் வரவேண்டாம். உங்கள் வாழ்விற்கு முடிவு கட்டிய பாவியாய் நான் மாற விரும்பவில்லை ..

நாளை உங்கள் குழைந்தைகளுக்காக ஈழ மக்களின் சரித்திரம் எழுதப்பட் டிருக்கும்! பண்டாரவன்னியன் வாள்வீச்சு பற்றி இருக்கும் அந்தப் பக்கத்தை தட்டுங்கள். சங்கிலியனின் போர் முரசு கிளம்பும். அதனையும் விடுங்கள் இப்போது நீங்கள் எண்பதுகளுக்கு வந்திருப்பீர்கள் அங்கே இளைஞர்களின் விடுதலைப் போராட்ட வரலாறு பொறிக்கப்பட்டிருக்கும் அங்கே ஒரு மூலையில் ஒரு சிறிய அளவில் ரத்தத்தினால் தங்காலை சிறைச்சாலை என்று எழுதப்பட்டிருக்கும் அது யார் இரத்தம்? சந்தேகம் வேண்டாம் தங்காலையில் சிறையிலே அடித்து கொல்லப்பட்ட மட்டுநகரைச் சேர்ந்த ரஞ்சன் என்பவனின் குருதி தான் அது எப்போது இது நடந்தது? விடை காணத் துடிக்கும் நீங்கள் என்னுடன் வாருங்கள் நான் உங்களை 5 வருடங்கள் பின்னோக்கி அழைத்து செல்கிறேன் அங்கே தான் அந்த இரகசியம் மூடி மறைக்கப்பட்டு இருக்கிறது.
1985 ஆம் ஆண்டு தமிழ் பேசும் மக்களின் போராட்டம் உச்சியை தொட்ட வேளை அங்கே ஒரு அனர்த்தம் இதயத்தை குத்திப் பிளக்கும் அழுகுரல் இளைஞர்கள் விறகுகட்டைகளால் அடிக்கப்பட்டு கொண்டிருக்கிறார்கள். அம்மா.... அம்மா... நீங்கள் ஒருவரும் அழவேண்டாம் அது ஒரு இளைஞ்னின் அழுகுரல். அவன் பெயரை நான் கூறமாட்டேன் ஆனால் அவன் மட்டுநகரைச் சேர்ந்தவன் ஏதோ சிங்களத்திலே உரக்க ஏசுவது போல் கேட்கிறதா? அதன் தமிழாக்கம் இதோ?
உன் அம்மாவை கொண்டு வா நான் படுக்க வேண்டும்
உன் அக்காவை நான் உன் கண்முன்னே கெடுக்க வேண்டும்
இது தான் என்னால் சொல்லக் கூடியது. உங்களில் சிலருக்கு சிங்களம்விளங்கும் என நினைக்கின்றேன் அப்படியானால் மௌனமாய் இருங்கள். வயதுக்கு வந்த பெண்களும் உங்களில் இருப்பதனால் அவர்கள் பச்சையாய் சொல்வதை என்னால் அப்படியே கூறமுடியவில்லை.
ஏன் அந்த இளைஞன் அழுகிறான்?
அங்கு அவனை அடிப்பவர்கள் யார்?
அவனை ஏன் அடிக்கிறார்கள்?
முதலாவது வினாவுக்கு விடை அவனால் அந்தக் கொடுமையைத் தாங்க முடியவில்லை அவர்கள் அவனை விறகு கட்டையால் அல்லவா அடிக்கின்றார்கள். இரண்டாவது வினாவுக்கு விடை, தங்காலைச் சிறைக்காவல் அதிகாரிகள். தூசணை வார்த்தைகளால் ஏசுபவன் பண்டகசாலை பொறுப்பாளன் கெட்டியாராட்சி **(store keeper)** அடி அடி என்று உறுமிக் கொண்டிருப்பவன் சந்திர சிறி ஜெயிலர் அனுமதி கொடுத்தவன் **sp (suprindant of prison)** பள்ளயக் கார.

அவசரப் படாதீர்கள் மூன்றாவது கேள்விக்கு விடை தான் நீங்கள் கேட்கின்ற அழும் ஓலத்தின் பிரதிபலிப்பு சிறையுடைப்பு. என்ன நடந்தது? எப்படித்தப்பியோட முயற்சித்தார்கள்?இறுதியில் நடந்தது என்ன? இவை யாவற்றுக்கும் விடைதர முன் தங்காலை சிறையின் அமைப்பு பற்றி சிறிய படம் ஒன்று வரைந்திருக்கின்றேன் அதனைப் பாருங்கள். இந்தப் படம் விளங்கிய பின் அதோ அந்த சிறையின் முன் நிற்கின்ற அந்த மரத்தின் கீழே இருந்து மிகுதியை பேசுவோம்.

ஆடு மாடுகளை பிணைப்பது போன்று பிணைத்து பேருந்து வண்டிகளிலே அவர்கள் அனுப்பப் பட்டார்கள். கீழே நாற்பது பேரும் மேல் மாடியில் அறுபது பேரும் விடப்பட்டனர். இவர்கள் ஈழத்தின் சகல பாகங்களையும் சேர்ந்தவர்கள் கல்முனை, மட்டு நகர், யாழ், மன்னார், முல்லை, வவுனியா என சகல இடங்களைச் சேர்ந்தவர்களும் சிறைபிடிக்கப் பட்டிருந்தனர். இவர்களில் கூடுதலானோர் மட்டுநகரைச் சேர்ந்தவர்கள்.




**a)** தங்காலைச் சிறைச்சாலையின் முன்பகுதி. சிங்கள சாதாரண கைதிகளை வைத்திருக்கும் கட்டிடங்களைக் கொண்டிருக்கிறது.

**b)** தங்காலைச் சிறையின் பின் பகுதி மாடிக்கட்டிடம் 84ம் ஆண்டு கட்டியது. அங்கு தான் தமிழ் பேசும் இளைஞர்களை 'பயங்கரவாதி' என்று பிடித்து வைத்து சிறைப்படுத்தியது இலங்கை அரசு.

**C)** தமிழ் கைதிகள் இருந்த பகுதிக்கு செல்வதற்கான பிரதான வழி(இரும்புக் கம்பிகளினால் செய்யப்பட்ட கதவு)

**d)** சிறை வைத்தியசாலை

படத்தைப் பார்த்தவுடன் உங்களில் சிலர் முணுமுணுப்பது எனக்கு கேட்கிறது ஒரு பக்கம் நேவி மறுபக்கம் பொலீஸ். எப்படித் தப்பியோட...... ஆனால் முடிந்தது எப்படி?

84ம் ஆண்டுப் பகுதியிலே கட்டிமுடிக்கப்பட்ட தங்காலைச் சிறையின் **B** பிரிவானது ஒரு மாடிக் கட்டிடம். மேல் மாடி ஒரு மண்டப வடிவிலும் கீழ்ப்பாகம் சிறிய சிறிய அறையாகப் பிரிக்கப்பட்ட 10 **(cell)** களைக் கொண்டதாகும் இவ்வாண்டின் இறுதிப் பகுதியிலே வெலிக்கடை சிறையில் அடைக்கப்பட்டிருந்த சுமார் நூறு தமிழ் பேசும் இளைஞர்கள் தங்காலைச் சிறைக்கு மாற்றப்பட்டார்கள்.

எங்கெங்கு பிடிக்கப்பட்டார்களோ அங்கங்கு சித்திரை வதை செய்யப்பட்டு வாக்கு மூலம் என்ற பெயரில் ஏற்கனவே எழுதப்பட்ட தாள்களில் கையொப்பம் பெற்ற பின் தான் சிறைக்கு அனுப்புவது வழமை. அப்படி வந்தவர்கள் தான் இவர்களும். அதோ அங்கு அம்மா அம்மா எனஅழுகிறார்களே அந்த இளைஞர்கள். இவர்கள் கொண்டு வரப்பட்ட நாளில் இருந்து

* உணவு அளவாக கொடுப்பதில்லை .

*உடுத்திருந்த உடையைத்தவிர வேறு உடை இல்லை.

* வெளியுலகத்துடன் தொடர்பு கிடையாது .

நான் சொல்வதை நீங்கள் செவி மடுக்க ஆவலாய் இருப்பதனால் மேலே நான் சொன்ன இந்த மூன்று விடயங்கள் தொடர்பாகச் சிறு விளக்கம் தர வேண்டும் என நினைக்கிறேன்.

உணவு காலை ஆறு அவுன்ஸ் பாண். பால் பிழிந்த தேங்காய்ப் பூவிலே செய்த சம்பல். மதியம் எட்டு அவுன்ஸ் சோறு. இது தான் சாப்பாடு. கேட்கும் போது பரவாய் இல்லையே என தோன்றும். ஆனால் அந்தச் சாப்பாடு எப்படிப்பட்டது, என்பதை சொல்கிறேன். அதன் பின் உங்கள் அபிப்பிராயங்கள். கறி சாதாரணமாய் ஒரு இறைச்சி. ஒரு மரக்கறி

(மரக்கறியிலே புளுக்கள் மிதக்கும்) இறைச்சி மாடு இன்றேல் குரங்கு. இவனுக்கு எப்படித் தெரியும் என்று யோசிப்பீர்கள் குரங்கு உரோமத் துடன் சில நாட்களில் வரும் வேறு ஆதாரம் தேவையா? ஒரு பிடி சோற்றுக்குள் நுழைந்தது (எண்ணிக் கணக்கிட்ட படி ஆதாரம் தயாநிதி) 20 கற்கள் இருக்கும் அதுமட்டுமல்ல,

உடையைப் பற்றியும் நீங்கள் அறியவேண்டும். ஏனென்றால் அது வெளி உலகிற்குத் தெரியாது இப்போதாவது தெரிய வேண்டும் அல்லவா.கைது செய்யப்படும் போது என்ன உடுத்திருந்தார்களோ அதே தான். ஒரு வருடத்திற்கும் மேலாக எப்படிக் குளிப்பார்கள் தெரியுமா சேட்டைக் கழற்றி இடுப்பிலே கட்டி குளிப்பார்கள். மாற்றுடைகள் வழங்கப்ப டவில்லை.

இறுதியான வெளியுலகத் தொடர்பு சம்பந்தமாக நான் சிலவரிகள் சொல்லவேண்டும். பத்திரிகைகள் வழங் கப்படவில்லை. கடிதத்தொடர்புகள் அனுமதிக் கப்படவில்லை. பெற்றோரோ அன்றி உறவினரோ பார்ப்பது தடை செய்யப்பட்டது. கிட்டத்தட்ட மிருகங்கள் அடைக்கப்பட்ட நிலை.

நாளுக்கு நாள் அடி உதை வேதனை. உடல் ரணங்களுடன் மன ரணங்கள் எவ்வளவு நாளுக்கு? மாதத்தில் ஒருமுறை எஸ்.பி பார்வையிடவருவார். கெஞ்சினார்கள். மன்றாடினார்கள். குறைந்தது மாற்றி உடுக்க ஒரு உடை தாருங்கள். அன்றேல் வீட்டிலிருந்து எடுக்க அனுமதி கொடுங்கள் என்று. கேட்டவை மறுக்கப்பட்டன. கேட்கப்படாத அடி உதைகள் கொடுக்கப்பட்டன. இது எதனைக் காட்டியது? இதோ நீங்கள் எதிர்பார்க்கும் சிறையுடைப்பு முயற்சி. அன்று ஒரு வெள்ளிக்கிழமை. இரவு எட்டு மணிக்குக் கடமையைப் பாரமெடுக்கும் குழு வந்து அவர்கள் எல்லோரையும் எண்ணிவிட்டுச் செல்கிறார்கள். சிலநிமிடங்கள் ஓடி மறைகின்றன. ஒருவருடன் ஒருவர் பேசவில்லை. சிலர் மூலைக்குள் முடங்கிப் போயிருந்தார்கள். ஒரு இளைஞன் எழும்பினான்.

இன்று நாங்கள் எல்லோரும் ஒன்று கூடிப் பேசவேண்டும். உணவு இன்றி, உடை இன்றி ஒழுங்கான உறையுள் இன்றி இதற்குள்ளே வாழ நாம் என்ன மிருகங்களா? எதற்காக நாம் இங்கே இருக்கின்றோம். மரணம் நாம் எப்போதோ அணிந்துவிட்ட ஆடை. இந்த மரணத்துக்குமேல் எம்மை ஒன்றும் செய்துவிட முடியாது.

அங்கே அமைதி நிலவுகிறது. ஒரு பெரிய மனிதர் கிட்டத்தட்ட ஐம்பதுகளைக் கடந்துவிட்டவர் மட்டுநகர் சிறையுடைப்பிலிருந்து தப்பியவர்கள் சிலருக்கு உதவி செய்தார் எனக் கைது செய்யப்பட்டவர். இரண்டு கண்களிலும் கண்ணீர் சிந்த கிழிந்த சாரத்துடன் அந்த இளைஞனை நோக்கிய வண்ணம் இருக்கின்றார்.
என்னதான் உனது முடிவு... ஒரு மன்னாரைச் சேர்ந்த இளைஞனின் குரல் இது.

சொல்கிறேன். நாம் இனியும் பொறுக்க முடியாது. மனிதாபிமான முறையிலே எம் உரிமைகளைக் கேட்டோம் தரப்படவில்லை. துப்பாக்கிகளை தூக்கினோம். இங்கும் மனிதாபிமான முறையிலே கேட்டோம் மறுக்கப்பட்டுவிட்டது. போராடுவோம்.

வெறும் கைகளுடனல்லவா நாம் நிற்கிறோம். மறந்து விட்டாயா நண்பா? பதின்மூன்று வயது நிரம்பியவன் கேட்டான்.

துப்பாக்கிகள் மட்டும்தான் வலிமைகொண்டவையல்ல அதனைத்தூக்கு என்ற மனங்களும் தான். போராடு வோம். அதாவது உண்ணாவிரதம் இருப்போம். இறக்கும் வரை இருப்போம். வெளியுலகத்திற்கு தெரிய வரட்டும். அங்கே எம்மக்கள்; எமக்கு ஆதரவு தருவார்கள். அரசை எமது கோரிக்கைக்கு இணங்க வைப்போம். இது தொடர்பாகத்தான் பேசவேண்டும். வாருங்கள். ஒன்று கூடுங்கள்.

அந்த இளைஞனின் வேண்டுகோளைத் தொடர்ந்து அவர்கள் யாவரும் ஒன்று கூடுகிறார்கள். அங்கே ஒரு முடிவு எடுக்கப்படப் போகிறது. என்ன முடிவு. அது வரலாற்றில் பதிய வேண்டிய முடிவு. சற்று அமைதி யாய் இருங்கள். என்ன பேசுகிறார்கள் என்று கேட்போம்.

வயோதிபப் பெரியவர் கூட்டத்தை முன்னெடுதது‌ச் செல்கின்றார். அங்கு ஒவ்வொருவரும் தயாராக இருக்கின்றார்கள். அந்த இளைஞன் ஆரம்பிக்கின்றான். என்ன பேசுகிறான் என்று கேளுங்கள்.

உடுக்க வேறு உடை இல்லாமல் நாங்கள் எவ்வளவு காலம் இருப்பது? இன்றுடன் முடிகிறதா பொறுக்கலாம். நாளை விடியப் போகிறதா காத்திருக்கலாம். இது என்று எனத் தெரியாதநிலை. நிர்வாகத்தை அணுகக்கூடிய முறையில் எல்லாம் அணுகி விட்டோம். பயனேதும் இல்லை. ஆகவே எங்களில் சிலராவது உண்ணாவிரதம் இருப்போம். இறப்பு எல்லோருக்கும் வருவதுதான். ஆனால் அது எப்படி வந்தது? என்பதில்த்தான் ஒரு மனிதனின் வாழ்க்கைத் தனித்துவமே தங்கியிருக்கிறது.

பேசி முடித்ததின் பின் யார் யார் உண்ணாவிரதம் இருப்பது என்று தீர்மானிக்கிறார்கள். **39** பேர் தயார். என்ன கோரிக்கை? இதோ அவர்கள் முன் வைத்த கோரிக்கைகள்.

(மீண்டும் அடுத்த இதழில்த் தொடரும்)

# எமன் அனுப்பினான் என்னை... கூட்டிவா என ஜே. ஆரை.

தூதுவன்: பின்னர் என்ன நடந்தது பிரபே!

எமன்: வந்தவை வாங்கி கட்டிக் கொண்டு போச்சினம்.இலங்கையில் தோ்தல் எண்டு சொல்லி ஏதோ நடந்தது ஜே.ஆர் பிரச்சனையை முடிந்தளவு சிக்கலாக்கி விட்டு பதவியை இன்னொருவரிடம் கொடுத்து விட்டு இளைப்பாறுகிறான்

தூதுவன்: இப்போ பதவியில் இருப்பவன் யார் பிரபே!

எமன்: பிறேமதாசா

தூதுவன்: பிறேமதாச என்றால் என்ன அா்த்தம் பிரபே!

எமன்: பிரேம என்றால் தமிழ் பேசும் மக்களை என்று அா்த்தம் தாச என்றால் நாசகாரம் பண்ணிக் கொலை செய்பவன் என்று பொருள்.

தூதுவன்: இவ்வளவு செய்த அவனை ஏன் பிரபே சின்ன வயதிலே கொன்று போடவில்லை.

எமன்: உலகத்தில் இப்போது அநியாயம் செய்பவா்கள் தான் நீண்ட காலம் வாழ வேண்டும் என்று ஆண்டவன் புதிதாக சட்டம் கொண்டு வந்திருக்கிறாா். சட்டத்தை மீறி நான் சாதாரண உயிா் எடுக்கும் அமைச்சா் என்ன செய்து விட முடியும் தோழா.

தூதுவன்: என்ன பிரபே திடீரென தோழா என்று அழைக்கிறீா்கள்.

எமன்: இப்படிக் கதைத்தவா்கள் எல்லாம் பெரிய கடைகள் வாங்கி பணக் காரா்களாகி விட்டாா்களாம் நானும் முயற்சிக்கின்றேன்.

தூதுவன்: அப்படியானால் நான் பூலோகம் புறப்படட்டுமா பிரபே!

எமன்: இல்லை! இப்போது வேண்டாம் அங்கே யாழ் நகா் என்னும் பகுதியில் பிரேமதாசவின் விமானங்கள் குண்டுகள் பொழிகின்றன. நீ இலங்கைக்கு போக வேண்டுமானால் அவ்வழியாகத்தான் செல்லவேண்டும். அப்படிச் சென்றால் உன் கணக்கை முடித்து விடுவாா்கள்.

தூதுவன்: அப்படியானால் அதுவரை நான் என்ன செய்ய பிரபே

எமன்: மூன்றாம் யூனிற்றுக்கு போய் பூலோகத்தில் அகதிகளைச் சாட்டிக் காசு வாங்கி வீடுவாசல் வாங்கின ஒருவனை கொண்டு வரும் படி கூறினேன். அவன் அங்கிருந்தால் உடனே அவனை இவ்விடம் கூட்டி வா. அத்துடன் வீரதாண்டவன் தூதுவனிடம் சொல் ஒரு பெரிய கிடாரத்தில் எண்ணெய் கொதிக்க வைக்கும் படி.

தூதுவன்: எதற்கு பிரபே! எண்ணெயை கொதிக்க வைக்கச் சொல்கிறீா்கள்?

எமன்: அவன் கொஞ்ச நஞ்சமா சுத்து மாத்து பண்ணியிருக்கின்றான். அவனை அதற்குள் போட்டு எடுக்க வேண்டும்.

தூதுவன்: ஓ.கே பிரபே உடனடியாக அவனை கட்டி இழுத்து வருகின்றேன்.

எமன்: கவனம் உன்னிடமும் காசு கேட்பான் கொடுத்து விடாதே.

(தொடரும்)

# மன நீதிமன்றத்தில் நான் மனுக்கேட்கிறேன்

ஜனநாயக பூமியொன்று அராஜகத்தை சந்திப்பு
அப்பாவி ஜனங்கள் தானதற்குமுதல் சந்திப்பு
அச் சந்திப்புக்கு மக்களின் இரத்தத்தால் வரவேற்பு
அரசபடைகளின் அட்டூளியங்கள் தான் அணிவகுப்பு

சிறையிலே தான் மக்களின் நீண்ட குடியிருப்பு
சீவியம் முழுக்க அச்சிறையிற்கே அர்ப்பணிப்பு
பத்து மாதம் நிரம்பியவளும் அங்கே தான் இருப்பு
பால் வடியும் பாலகனும் அங்கு தான் பிறப்பு

அடுக்கடுக்காய் அகதிமுகாமின் அதிசயப் பிறப்பு
ஆயிரமாயிரம் மக்கள் அங்கு தான் இறப்பு
இதற்காகத் தான் அகதிமுகாமின் பிறப்பு
அல்லல் படும் மக்களின் ஆறுதல் அங்கு அழிப்பு

உண்பதற்கு உணவின்றி மக்கள் தவிப்பு
உறக்கமின்றி அவனின் இரு விழியும் விழிப்பு
அரசபடையின் ஆயுதந்தான் அன்றாடம் மக்கள் அழிப்பு
ஆளும் அரசுக்கு இதுவோர் ஆனந்தச் சிரிப்பு

நீண்ட கால அவனின் விடியலுக்கு
நீதி சொல்ல எம் நாட்டில்-ஓர்
நீதி மன்றம் இல்லை- எனவே
நான் மனநீதி மன்றத்தில் மனுக்கேட்கின்றேன்.

-அகில்-